# வடபகுதி விவசாயிகள் உழைப்புக்கண்டு ஜேர்மன் பேராசிரியர் பிரமிப்பு


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49

போன்: 389

National Tamil Daily

மலர் 11

இதழ்: 204

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 19 ஜ: ஆகிர் 21 வியாழக்கிழமை (4-9-69)



ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு

மூன்று மாதம் — ரூ. 18-00

ஆறு மாதம் — ரூ. 34-00

ஒரு வருடம் — ரூ. 66-00

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்

மூன்று மாதம் — ரூ. 4-00

ஆறு மாதம் — ரூ. 7-50

ஒரு வருடம் — ரூ. 14-00

முற் பணம் கட்ட வேண்டும்

தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.


# பயங்கர பஸ் கொள்ளை: யாழ்ப்பாணத்தில் மூவர் கைது

## சந்தேக கார் பொலிஸ் பாதுகாப்பில்

— நமது நல்லூர் நிருபர் —

யாழ்.—மட்டக்களப்பு இ. போ. ச. பஸ்ஸில் நடந்த பயங்கரக் கொள்ளை சம்பந்தமாக நேற்று யாழ்ப்பாணத்தில் மூவர்கைது செய்யப்பட்டனர். இக் கொள்ளையில் சம்பந்தப்பட்டதாகக் கருதப் படும் காரொன்று சுன்னாகம் பொலிஸில் பாதுகாப்பில் வைக் கப்பட்டுள்ளது.

சென்றவாரம் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு சென்ற பஸ்ஸில் வாழைச் சேனையிலிருந்து 17 மைல் தூரத்திலுள்ள 'புணானை' என்ற இடத்தில் பொலிஸ் உடையில் துப்பாக்கி முனையில் நடாத்தப்பட்ட இந்தப்பயங்கரக் கொள்ளை சம்பந்தமாக கொழும்பு சி. ஐ. டி. இலாகாவைச் சேர்ந்த பொலிஸார் இந்த மூவரையும் கைது செய்தார்கள்.

சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக் காக மட்டக்களப்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத் திரி வீதியைச் சேர்ந்த [illegible] யநாதன் என்ற [illegible] இளவாலையைச் சேர் [illegible] ரும், [illegible] பூதன் என்றழைக்கப் [illegible]

சம்பந்தப்பட்ட கார் இப் பொழுது சுன்னாகம் பொலி ஸ் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளது. கொழும்பிலி ருந்து கைரேகை [illegible] புணர் [illegible]

## "பாடசாலை வசதி கட்டணத்தில் சம்பளம் வழங்க முடியாது"

### கல்வி இலாகா அறிவிப்பு

பருத்தித்துறை, செவ். "மாணவரிடமிருந்து காலத்துக்குக்காலம் வசூலிக் கப்படும் சேவை வசதிக்கட் டணத்திலிருந்துஎந்தப்பாட சாலை ஊழியருக்கும் சம்ப ளம் வழங்கப்படக்கூடாது. அவ்வாறு ஓர் அதிபர் சம்ப ளம் வழங்கினால், அவரு டைய சம்பளத்திலிருந்து அப்பணம் அறவிடப்படும்" என்று கல்விப்பகுதி சகல பாடசாலை அதிபர்களுக்கும் ஒரு சுற்றறிக்கை விடுத்துள் ளது.

இதன்விளைவாக நிரந்தர ஆசிரியர் அல்லாத ஆசிரி யர்கள் பதவியிழக்க வேண் டிய நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. சிலபாடசாலை களில் இடமாற்றம் செய் யப்பட்டு பல மாதக்கணக் காக நிரப்பப்படாமல் காலி யாக இருக்கும் இடங்களில், மிகக் குறைந்த சம்பளத் தில் பெற்றோர் ஆசிரிய சங் கங்கள் ஆசிரியர்களை நிய மித்திருந்தால் அவர்கள் தொடர்ந்து பாடசாலைக்குச் செல்லமாட்டார்களெனத் தெரிகிறது. இதனால் பரீ ட்சை எழுதவிருக்கும் மாண வர் பெரிதும் பாதிக்கப்படு வரெனப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

மண்டைதீவில் சம்பவம்

## ஒருவர் மரணம்; இருவர் கவலைக்கிடம்

## பத்து ஆண்டுகளில் யாழ்ப்பாணம் சிறப்பாக முன்னேறியுள்ளதாம்

— பேட்டி 'யோகி' —

யாழ்ப்பாணம், வியாழன் கடலமட்டத்தில் உஷ்ணப் பிரதேசத்தில் உலகத்தி லேயே யாழ்ப்பாணக் குடா நாட்டில்தான் உருளைக்கிழ ங்கு உற்பத்தி அதிகரித் துள்ளது. 5 ஏக்கரில் ஆரம்ப மான உருளைக்கிழங்கு செய்கை 5 வருடத்தில் 14000 ஏக்கரில் அதிகரித் துள்ளதென்பதை புள்ளி விபரங்களில் இருந்து அறி யக் கூடியதாயிருக்கிறது. இதற்கு யாழ்ப்பாண விவ சாயிகளின் உழைப்பும், அக் கறையும், விடாமுயற்சி யுமே காரணம்.

ஜேர்மன் நாட்டைச் சேர் ந்த விவசாய பேராசிரியர் திருமதி. அஞ்சலிக்கா சிவர்ஸ், நேற்று நமது நிரு பருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

1951-ம் ஆண்டிலும், பின் 1958-ம் ஆண்டிலும் இலங் கைக்கு வந்திருந்த இவர் இலங்கை முழுவதையும் சுற்றிப்பார்த்தபின் 436 பக் கங்களை கொண்ட ஒருநூலை ஜெர்மன் மொழியில் வெளி யிட்டிருக்கிறார். இலங்கை யைப்பற்றிய தகவல்களைக் கொண்ட இந்தநூல் இலங் கையின் சமூக, பூமிசாத்திர அமைப்புகளைப் பின்னணியா கக் கொண்டு எழுதப்பட் டிருக்கிறது.

இந்தநூலில் இலங்கை யைப் பற்றிய பல புகைப் படங்களையும் காணக்கூடிய தாயிருக்கிறது. இந்த நூலில் முக்கிய இடம்பெறுவது யாழ்ப்பாணக் குடாநாடு தான். கரம்பனில் ஒரு குடி சையின் முன்னால் ஒருபெண் ணும் குழந்தையும் நிற்கும் புகைப்படமொன்றும் இந் நூலில் காணப்படுகின்றது.

இப் புகைப்படத்திலுள்ள பெண்ணை தான் சந்திக்க விரும்புவதாக அஞ்சலிக்கா சிவர்ஸ் என்னிடம் தெரிவித் தார். 1958-ம் ஆண்டு இப் படத்தை கரம்பனில் எடுத் ததாகவும், அச்சமயம் திரு. ஸ்ரீகாந்தா அரசாங்க அதிப ராக இருந்தாரென்றும் அவர் தெரிவித்தார்

யாழ்ப்பாணம் அரசாங்க செயலகததிற்கு விஜயம் செய்த இவர் அரசாங்க அதி பர் திரு, பீட்டர்ஸ், மாவ ட்ட விவசாய விரிவாக்க அதி பர் திரு. பி. மாணிக்கவாச கர் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

பத்துவருடங்களுக்குள் யாழ்ப்பாணம் வெகு விரை வாக முன்னேறி விட்டதென் றும், கிராமங்கள்தோறும் அழகிய வீடுகள் உருவாகியி ருப்பதாகவும் அவர் தெரி வித்தார். நல்ல விவசாயம் செய்யும் நிலங்களில் பெரும் வீடுகள் உருவாக்கப்பட்டி ப்பதாகவும் தெரிவித்தார்.

மாவட்ட விவசாய காரி யாலயத்தில், உற்பத்தி புள்ளி விபரங்களை அவர் பார்வையிட்டார். உருளைக் கிழங்கு உற்பத்தி அதிகரித் திருப்பது தனக்கு ஆச்சரி யத்தைக் கொடுப்பதாகத் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து விமா னத்தில் பலாலியை வந் தடைந்த டாக்டர் அஞ்ச லிக்காவை மாவட்ட விவ சாய தலைமைப்பீட போதனா சிரியர் திரு. தவராஜசேல் விமானநிலையத்தில் வரவேற் றார்.

நல்லூர் கந்தசாமி கோவிலுக்குச் சென்று இவர் கார்த்திகை உற்சவ நிகழ்ச்சி களைப் பார்வையிட்டதாக வும் தெரிவித்தார்.

## இவருக்குப் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் மாஜிஸ் திரேட்டாகக் கடமையாற் றும் ஜனாப் மொகமட்ஜமீல் அடுத்த ஜனவரி மாதம் 1ம் திகதியிலிருந்து கம்பஹா வுக்கு மேலதிக மாவட்ட நீதிபதியாகப் பதவிஉயர்வு பெற்று செல்கின்றார் கொழும்பு தெற்கில் மாஜிஸ் திரேட்டாகக் கடமையாற் றும் திரு கொலின்ஸ் மென் டிஸ் யாழ்ப்பாணம் மாஜிஸ் திரேட்டாகக் கடமையாற் றுவார். (கா. நி)

## பஸ்ஸில் திருட்டு

ஊர்காவற்றுறை, புதன் யாழ்ப்பாணத்திலிருந்து நாரந்தனைக்குச் செல்வதற் காக பஸ்ஸில் ஏறிய நாரந் தனையைச் சேர்ந்த கஸ்பாரி டம் மணிபர்ஸ் களவாடப் பட்டுவிட்டதாக கூறப்படு கிறது. இப்படியான சம்ப வம் இப்பகுதியில் அடிக்கடி நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

## 'விவசாயிகள் உரிமைபெற தனி இயக்கம் வேண்டும்'

மல்லாகம், புதன் "இலங்கையில் நூற்றுக்கு 90 சத வீதமானோர் விவ சாயிகள். இவர்கள் ஒன்று பட்டு உழைப்பதினால் ஏற் படக்கூடிய பலன் அதிகம் அவர்கள் இதைச் சிந்திப்ப தாயில்லை. விவசாயிகள் உரி மைக்காகத் தனி இயக்கங் கள் அமைத்துப் போராடு வதைவிட வேறு வழியில்லை" இவ்வாறு திரு. வ. பொன் னம்பலம் கம்பர்மலையில் பேசுகையில் கூறினார்.

பெரும் வியாபாரிகளின் நலன் கருதி இன்று அரசாங் கம் பம்பாய் வெங்காய இறக்குமதியை அனுமதித் துள்ளதெனக் குறிப்பிட்ட அவர் மேலும் பேசுகையில் சைகளில் வெங்காயம் அழு கிக் குவிந்து காணப்படுகின் றது. நாணய மதிப்பிழப்பை தொடர்ந்து வெங்காயத் தின் விலையை அதிகரிக்க மறுத்த அரசாங்கம் வட பகுதி விவசாயிகளின் வயிற் றில் மண்ணைப் போட்டுள் ளது. இத்தகைய செயல் கள் உபஉணவு உற்பத்திக்கு ஆப்புவைக்கும் நடவடிக்கை யாகும். அரசாங்கம் இவற்றை உணர மறுத்தால் விவசாயிகள் போர்க்கொடி உயர்த்தி தமது உரிமை களுக்குப் போராடவேண்டி ஏற்படும் என்றார்."

இலங்கை விவசாயிகள் காங்கிரஸ் கம்பர் மலைக் கிளைக் கூட்டத்தில் திரு. வ.

## அதிபர் தாக்கினாராம்: லிகிதர் புகார்

நல்லூர், புதன் கல்லூரி அதிபர் ஒருவர் தம்மைத் தாக்கிவிட்டதாக வும் வேலைக்குப் போகப் பயமாக இருப்பதாகவும் காரைநகரிலுள்ள கல்லூரி ஒன்றின் லிகிதர் நடராஜா என்பவர் வடமாநில கல்வி அதிபருக்குத் தந்திமூலம் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பாடசாலை அதிபர் தம்மைத் தாக்கியது சம்பந்தமாக உடனடி விசா ரணை மேற்கொள்ளும்படி அவர் கல்வி அதிபரிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் அல்லாத ஆசிரி... தெரிவிக்கின்றனர்.

மண்டைதீவில் சம்பவம்

## ஒருவர் மரணம்; இருவர் கவலைக்கிடம் நஞ்சுகலந்த கள் அருந்தினராம்?

யாழ்ப்பாணம், வியா, நச்சுத்திராவகம் கலந்த கள்ளைக்குடித்ததாகக் கூறப்படும் மூவரில் ஒருவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார். மற்றிருவர் அறிவிழந்தநிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அபாயகரமான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம் மண்டைதீவு 8-ம்வட்டாரத்திலுள்ள பெரியகாடு என்ற இடத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

கள்ளைக் குடித்த சிலநிமிட நேரத்தில் மரணமானவர் கைலாசநாதன் என்பவராவர். விசாகரத்தினம் என்ற இருபத்திமூன்று வயது வாலிபரும், இளையதம்பி என்ற 28 வயது நபரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இருவரும் அபாயகரமாக விருப்பதாகவும், இளையதம்பியின் நிலை பட்டு மோசமாக விருப்பதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் மூவரும் அருந்திய கள்ளில் நச்சுத்திராவகம் கலக்கப்பட்டிருக்கலாமென பொலிசார் சந்தேகிக்கின்றனர். இதுசம்பந்தமாக மண்டைதீவைச் சேர்ந்த மூவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பகுதியினர் புலன் விசாரணை நடாத்திவருகின்றனர். (கா நி.

யாழ்ப்பாணத்தில்

## தேசிய பொருட் காட்சியை பிரதமர் திறந்து வைப்பார்

யாழ்ப்பாணம், வியா அடுத்தவருடம் மார்ச் மாதம் நடுப்பகுதியில்யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடைபெறவிருக்கும் தேசிய பொருட்காட்சியை பிரதமர் டட்லி சேனநாயகா திறந்து வைப்பார்.

யாழ்ப்பாணம் அரசாங்க செயலக மண்டபத்தில்நேற்றுக்காலை அரசாங்க அதிபர் திரு பீற்றர்ஸ் தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட காரியாலயங்களை சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வடபகுதியில் கடந்த 20 ஆண்டுகள் நடந்த அபிவிருத்தி திட்டங்களின் மாதிரிப் படங்கள் பொருட்காட்சியில் வைக்கப்படும்.

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பாக இருப்பார். கமத்தொழில் ஆணையாளர் திரு சபாரத்தினம் விவசாயம், கூட்டுறவு விற்பனை இலாகா ஆகியவற்றிற்கு பொறுப்பாகவும் வித்தியாதிபதி திரு எஸ். தணிகாசலம் சமூகசேவைப் பகுதி அதிபர் திரு ஆர். சிவசிதம்பரம் ஆகியோர் கலை கலாச்சாரப் பகுதிகளுக்கு பொறுப்பாகவும் இருப்பார்கள். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் வர்த்தக துறைப் பகுதிக்கு பொறுப்பாகஇருப்பார்.

## புலவர் கோவிந்தன் யாழ். நகர் வருவார்

மல்லாகம், புதன் இலங்கை விஜயம் செய்யவிருக்கும் தமிழக சட்டசபை சபாநாயகர் புலவர் கோவிந்தன் இம்மாதம் 9-ம் திகதி யாழ்ப்பாணம் வருவார் எனத் தெரியவருகிறது.

மாதகலில் நடைபெறவிருக்கும் திருவள்ளுவர் நினைவுதினவிழாவில் பிரதம பேச்சாளராக கலந்துகொள்ள அழைககப்பட்டுள்ளார். இவருக்கு யாழ்ப்பாணத்தில் சிறப்பான வரவேற்புகள் நடாத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திருகோணமலையில் நடைபெறவிருக்கும் திருவள்ளுவரின் விழாவில் கலந்துகொள்ளுவதற்காக இம்மாதம் 6-ம் திகதி இலங்கை வருவது தெரிந்ததே.

பொலிஸார் இந்த மூவரையும் கைது செய்தார்கள்.

சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக மட்டக்களப்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## ஹோ-சி-மின் உடல் நிலை

ஹனோய், செப். 3 வட வியட்னும் ஜனுதிபதி ஹோ-சி-மின் உடல் நிலை மிகவும் கலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹோ-சி-மின் கடந்த சில தினங்களாகவே சுகவீனமுற்றிருக்கிறார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சத்தியநாதன் என்றழைக்கப்படும் ... ளாரும், இளவாலையைச்சேர்ந்த யூதன் என்றழைக்கப்படும் மரியாம்பிள்ளை என்பவரும், சாவகச்சேரியைச் சேர்ந்த கார்ச்சாரதியான இம்மனுவேல் என்பவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவ் சம்பந்தமாக சுன்னுகத்தைச் சேர்ந்த கார்சொந்தக்காரர் ஒருவரையும் பொலிஸார் தேடுகின்றனர்.

சந்தேக நபர்கள் மட்டக்களப்பு கடுகதி பஸ் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை மட்டக்களப்புக்குக் கொண்டுபோகப்பட்டனர்

சம்பந்தப்பட்ட கார் இப்பொழுது சுன்னுகம் பொலிசில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. கொழும்பிலிருந்து கைரேகை நிபுணர்கள் வந்து சோதனைகள் நடநடத்தும்வரை இந்தக் கார் பொலிஸ் பாதுகாப்பிலேயே இருக்குமென்று தெரிகின்றது.

## "வெங்காய உத்தரவாதவிலை 5 சதம் கூட்ட வேண்டும்'

### ஆட்சிமன்றத்தில் துரைரத்தினம் கேள்வி

யாழ்ப்பாணம், வியா. வெங்காயத்தின் உத்தரவாத விலையில் உடனடியாக 5 சதம் கூட்ட வேண்டும் எனக் கோரும் பிரேரணை ஒன்றை நாளை மறுதினம் ஆட்சிமன்றத்தில் கொண்டு வருவதற்கு பருத்தித்துறை ஆட்சிமன்ற உறுப்பினரான திரு கே. துரைரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்

பின்வரும் கேள்வியையும் கேட்க முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

மூன்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்களையுடைய தொழில் நிறுவனங்கள், கடைகள், கைத்தொழில் நிலையங்கள் ஆகியன தமது தொழிலாளர்களின் ஊதியங்களை வங்கியொன்றின் மூலமோ தபால் அலுவலகத்தின் மூலமோ செலுத்த வேண்டுமெனவும், அதன் பின்னர் தொழில் அதிபரால் சட்ட விரோதமாக எதுவாயினும் அறவிடப்படுவது தண்டனைக்குரிய குற்றச் செயலாக்கப்படவேண்டும்

யாழ். மாவட்டத்தில்

## உப உணவு உற்பத்தி இரட்டிப்பாகியுள்ளது

அளவெட்டி, புதன் யாழ். மாவட்டத்தில் சென்ற காலப்போகத்திலும் பார்க்க இந்தக் காலபோகத்தில் உபஉணவு உற்பத்தி இரட்டிப்பாக உயர்ந்துள்ளது என விவசாய இலாகாவின் புள்ளி விபரத்திலிருந்து அறியமுடிகிறது.

விவசாய இலாகாவின் உப உணவு பொருட்களின் உற்பத்தி மதிப்பீட்டில் சென்ற முறையிலும் பார்க்க இம்முறை கிழங்குவகை செய்கையே கூடுதலான இடத்தில் செய்யப்பட்டு கூடிய உற்பத்தியைத் தந்துள்ளதாம்,

67-ம், 68ம் ஆண்டு 3604 ஏக்கர் நிலத்தில் 2,52,250 அந்தர் வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது இம்முறை 3595 ஏக்கர் நிலத்தில் 3,23,505 அந்தர் உற்பத்திசெய்யப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்கு 67ம்-68ம் ஆண்டில் 489 ஏக்கர் நிலத்தில் 2340 தொன் உற்பத்தி செய்யப்பட்டது. இம்முறை 1296 ஏக்கர் நிலத்தில் 7776 தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

மிளகாய் ... நிலக்கடலையில் 67-68-ம் ஆண்டில் 320 ஏக்கரில் 2880 அந்தர் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனுல் இம்முறை 380 ஏக்கரில் 3040 அந்தர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கிழங்கு வகைகளில் 67-68-ம் ஆண்டு 811 ஏக்கரில் 3 ஆயிரம் தொன் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனுல இம்முறை 528 ஏக்கரில் 8 ஆயிரம் தொன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இம்முறை சகல உப உணவுப் பயிர்களிலும்

(4ம் பக்கம் பார்க்க)

## "ஆராய கமிஷன் நிறுவுக"

### பிரதமரிடம் பட்டிருப்பு எம். பி. கோரிக்கை

மட்டக்களப்பு— யாழ்ப்பாணம் பாதையில் அண்மையில் ஏற்பட்ட கொள்ளைகளுக்கான மர்மங்களைப் பற்றி பூரணமாக விசாரணை நடத்துவதற்கு கமிஷன் ஒன்றை நிறுவும்படி பிரதம மந்திரியை பட்டிருப்பு எம். பியும் தமிழரசுக்கட்சி தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் கேட்டிருக்கிறார்.

நாட்டில் நடைபெற்று வரும் கொலை கொள்ளை சம்பவங்களில் பொதுமக்கள் பெரிதும் கிலி கொண்டிருப்பதாகவும், வடக்கில் கள்ளக் குடியேற்றத்தைத் தடுக்கவென ராணுவத்தை நிறுவ ஏராளமான பணத்தை விரயமாக்கும் அரசாங்கம் நாட்டின் மக்களைப் பாதுகாக்க போதிய நடவடிக்கை எடுக்காமலிருப்பது விசனமளிப்பதாகவும் திரு. இராசமாணிக்கம் பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ள அவசர கடிதமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

திரு. இராசமாணிக்கம் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது:-

அண்மையில் யாழ்ப்பாணம்-மட்டுநகர் வீதியில் புணையில் நடந்த பயங்கர பஸ் கொள்ளையும், எலகராவில் நடந்த கொள்ளையும் நமது நாட்டின் பாதுகாப்பு திட்டங்கள் எவ்வாறு பலவீனமாயிருக்கின்றன. என்பதை எடுத்துக் காட்டுகின்றன. நாட்டின் பல பாகங்களிலும் அண்மைக் காலங்களில் அனேக கொள்ளைகளும், களவுகளும் நடந்தும் அவைகளிற் பல கண்டுபிடிக்கப்படவில்லை. பகிரங்க பாதைகளில் நடமாடுவதும், தூரப் பயணங்களை மோட்டார் வகானங்கள் பஸ்கள் ஆகியனவற்றில் மேற்கொள்வதும் ஆபத்தாகி விட்டன. இந்நிலைக்கு காரணம் யாதென பொதுமக்கள் திகைப்பதில் ஆச்சரியமில்லை?

நாட்டின் பொலிஸ் நிர்வாகமும் பாதுகாப்பு முறைகளும் உறுதியானவைகளா? நேர்மையானவைகளா? இவைகளை நம்பி பொதுமக்கள் பாதுகாப்போடு உயிர் வாழமுடியுமா என்பது போன்ற கேள்விகளை பொதுமக்கள் கேட்கிறார்கள்.

பொலிஸ் பகுதியில் பல ஊழல்களும், லஞ்சப் புகார்களும், பாகுபாடுகளும் காணப்படுகின்றன என்று பொதுமக்கள் புகார் செய்து கொண்டிருக்கிறார்கள். பொலிஸ் நிர்வாகம் எதிரிக்குச்சாதகமாகக் காணப்படுகின்றதே ஒழிய முறைப்பாட்டுக்காரர்களுக்கு சாதகமாகஇல்லை என்ற புகார்களும் மக்களிடையே நிலவிவருகின்றன. பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையே நல்ல தொடர்பு இல்லை. பொலிசார் அதிகார மோகத்தினுல், அகங்காரம் பிடித்தவர்களாகிவிட்டார்கள். பொலிஸ் பகுதியில் மக்களுக்குநம்பிக்கையும், உறுதியும் குறைந்துகொண்டுவருகின்றது. புணையில் நடந்த துணிகரமான பஸ் கொள்ளைச் சம்பவம் இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகியிருக்கின்றது- இச்சம்பவத்தை நடாத்தியவர்கள் யார்? இதற்கு உடந்தையானவர்கள் யார்? இப்படியான சம்பவங்கள் பொலிசாரின் அசட்டையினுல், அல்லது உதவியோடு நடந்ததா? என்பதைப்பொலிஸ்இலாகா கண்டுபிடிக்க முடியாவிட்டால். பிரதமமந்திரி இதைக் கண்டுபிடிக்க என்ன வழிகளைக் கையாளப்போகிறார் என்பதை நாடறியஆவலாக இருக்கின்றது.

வடமாகாணத்தில் கள்ளக் குடியேற்றத் திட்டத்தை தடைசெய்வதற்கென பொலிசாரின் பந்தோபஸ்து அளித்து விரயஞ்செய்து, பயனற்ற செயலில் ஈடுபட்டுள்ள இந்த அரசாங்கம், நாட்டின் கொள்ளை, களவுகளைத்தடுக்க, பாதுகாக்கநடவடிக்கை எடுக்காமல் இருப்பது ஒரு கேலிக்கூத்தாக இருக்கிறது. கொள்ளைகளின் மர்மங்களை விசாரணைசெய்ய பிரதம மந்திரி தகுதியும், தரமும் வாய்ந்த ஒரு கமிஷனை நிறுவவேண்டும்."

... பேசுகையில் கூறினார்:

பெரும் வியாபாரிகளின் நலன் கருதி இன்று அரசாங்கம் பம்பாய் வெங்காய இறக்குமதியை அனுமதித்துள்ளதெனக் குறிப்பிட்ட அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இச்செயல் மூலம் யாழ்ப்பாணக் குடா எங்குமுள்ள ஏழை விவசாயிகளின் குடி... விவசாயிகள் போராட்டத்தை உயர்த்தி தமது உரிமைகளுக்குப் போராடவேண்டி ஏற்படும் என்றார்."

இலங்கை விவசாயிகள் காங்கிரஸ் கம்பர் மலைக் கிளைக் கூட்டத்தில் திரு. வ. பொன்னம்பலம் பேசினுர். திரு. ஜெயா குணரத்தினம் தலைமைவகித்தார்.

## கைதிகளைப் பராமரிக்க ரூபா 18 லட்சம் நிதி

### அரசிடம் கோருகிறுர் நீதி அமைச்சர்

கோட்டை, புதன் இலங்கையிலுள்ள சிறைச்சாலைக் கைதிகளைபராமரிக்க 18 லட்சம் ரூபாய் நிதிகோரியிருக்கிறுர் நீதி அமைச்சர்.

இப்போது கைதிகள் தொகை முன்னையவிட பன்மடங்காக அதிகரித்துவிட்டதால், அவர்களைப் பராமரிப்பதற்கு நிதி காணுமல் உள்ளது. பலவிதமான அவர்களது செலவைச் சமாளிக்க மேற்குறிப்பிட்ட தொகையை ஒதுக்கித் தருமாறு நீதி அமைச்சர் அரசாங்கத்திடம் கோரியிருக்கிறுர்.

கைதிகளின் நாளாந்த செலவுக்கும், அவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கும், மற்றும் செலவுகளுக்கும் இத்தொகை கோரப்பட்டுள்ளது.

கைதிகள் தொகை முன்னையைவிட இப்போது பன்மடங்காக அதிகரித்து வருவதாக நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## ஜப்பானில் பல்கலைக்கழக மாணவா—பொலிஸ் மோதல்:

### 8 பேர் காயம்

டோக்கியோ, செப் 3 ஜப்பானில் வாசிடா பல்கலைக்கழகத்தில் இன்று மாணவர்கள் வன்முறைகளில் இறங்கியபோது 8 பொலிஸார் காயமடைந்தனர்.

நேற்று சுமார் ஆயிரம் மாணவர்கள் தங்களைத் தாமே பல்கலைக்கழகக் கட்டடத்துக்குள் பூட்டிக் கொண்டார்கள். இவர்களை வெளியேற்றுவதற்கு பொலிஸார் பெரும் முயற்சியெடுத்தனர். இன்று அதிகாலை பொலிஸார் பல்கலைக்கழகக் கட்டிடத்துக்குள் பிரவேசித்த மாணவர்களைக் கலைப்பதற்கு முயற்சிசெய்து முடியாமல் தாக்குதல் நடத்தினுர்கள். இதைத் தொடர்ந்து பொலிஸார்மீது மாணவர்கள் குண்டுகளை வீசினுர்கள். இதில் சுமார் 8பொலிஸார் காயமடைந்தார்கள். 100 மாணவர்கள் வரை கைது செய்யப்பட்டதாகத் தெரிகின்றது.

... தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பாடசாலை அதிபர் தம்மைத் தாக்கியது சம்பந்தமாக உடனடி விசாரணை மேற்கொள்ளும்படி அவர் கல்வி அதிபரிடம் கோரியுள்ளார்

## 'அநீதி'

மல்லாகம், புதன் "தாய் வீட்டின் எஜமானி துன்பம் துயரத்தை தானே ஏற்று பிறருக்கு அன்பைச் சொரியும் காரணத்தால் எல்லோரும் தாயை அன்பு காட்டி நேசிக்கின்றோம் இளமையிலும் முதுமையிலும் அழுக்குப்படியும் தாயின் கரங்கள் எமக்கு அமுதூட்டும் அன்புக்கரங்களாக மாறுகின்றனர். இது தாய்மையின் மகத்துவம் அதுபோலவே நகரசுத்தித் தொழிலாளர்கள் எமக்கி தாயாக விளங்குகின்றனர். இத்தகையதாய்மைஉள்ளம் மணம் கமழவாழும் நகரசுத்தித் தொழிலாளார்களை சமூகத்தில் தாழ்ந்தவர்கள் எனப் புறக்கணித்தல் அநீதியானது"

மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வ.பொன்னம்பலம் வட்டுக்கோட்டை செம்பாட்டான் தோட்டம் சனசமூகநிலையத்தின் 14வது ஆண்டுநிறைவுவிழாவில்பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பிரசித்தி பெற்ற சோப் தொழிற்சாலைக்குப் பிணைப் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் (Van Salesman) தேவை. விண்ணப்பிக்கவும். தரன் ஆட்ஸ், 72/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1366

வடமாகாணத்தில் இனிப்பு, ரொபி, கோப்பி மற்றும் பல உற்பத்திச் சாமான்கள் வினியோகம் செய்வதற்குப் பிரதிநிதிகள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. பிணைப்பணம் ரூபா 2500/- அத்துடன் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. விளம்பர இல: 1080, C/o 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1080

### விற்பனைக்கு

தித்திக்கும் தேனுருக- எத்திக்கும் தமிழரின் பெருமை செப்பும் தமிழ்ப் பேராறுக ஆவணித் திங்கள் வெளிவந்து எமது 'தமிழ் முழக்கம்' எங்கும் முழங்கிக் கொண்டிருக்கிறது! ஆறு பக்கங்கள். விலை சதம் 10. இன்றே படித்துச் சிறப்பீராக! ஆசிரியர் ம.கி இயேசுதாசன், மலர்விழி அச்சாலயம், பாசையூர், யாழ்ப்பாணம். 1369

### வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் (இலங்கை வங்கிக்கு அண்மையில்) வீடு ஒன்று வாடகைக்கு கொடுக்கப்படும். சிறு குடும்பத்திற்கு உகந்தது. அரசாங்க சேவையாளராயின் விரும்பத்தக்கது. விபரங்கட்கு 312, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1371

## மக்கள் எதிர்ப்பு

பருத்தித்துறை புதன்

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கான மலசல கூடம் வீதியோரமாகக் கட்டப்படுவதை எதிர்த்து மந்திகைப் பகுதி மக்கள் யாழ்ப்பாண வைத்திய அதிகாரிக்கும், பருத்தித்துறை வைத்திய அதிகாரிக்கும் மகஜர்கள் அனுப்பியுள்ளனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 4—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 பேச்சு, 7-45 வாத்திய இசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்தித்திரட்டு 9-45 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.

## சிறுவன் ஆஸ்பத்திரியில்

வேலணை, புதன்

ஓடிக் கொண்டிருந்த டிராக்டர் பெட்டியில் விளையாட்டாக ஏறிக் கொள்ள எத்தனிக்கையில் நிலத்தில் விழுந்து காயமடைந்த சிறுவன் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகிறான்.

## திருமலை சோதிடருக்கு யாழ்ப்பாணத்தில் பாராட்டு

யாழ்ப்பாணம், வியா

திருக்கோணமலை சோதிடக் கலாநிதி திரு க. வேலுப்பிள்ளைக்கு யாழ்ப்பாண மேயர் திரு எஸ் நாகராஜா சென்ற ஞாயிற்றுக்கிழமை பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

இந்த வைபவம் வண்ணார் பண்ணை கிழக்கு ஆத்திப் புலம் கலைமகள் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றது.

திரு. வேலுப்பிள்ளையின் சோதிடக் கலைத்திறனையும் சந்திரமண்டலத்தில் காலடி வைக்க எத்தனித்த மனிதனின் முயற்சி நிச்சயமாக வெற்றி பெறும் என்று கணித்துக்கூறியதைப் பாராட்டுமுகமாகவும் நடைபெற்றஇந்த வைபவத்தில் மேயர் பேசுகையில் திரு. வேலுப்பிள்ளையின்சோதிடக் கணிப்புபலகாலங்களில் உண்மையாகியுள்ளனஎனத் தெரிவித்தார். உலக நிகழ்ச்சிகளின் மாற்றங்கள்பற்றி திரு. வேலுப்பிள்ளை கணித்துச் சொல்லிவருவது முன்கூட்டியே சில சம்பவங்களை அறியக்கூடியதாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

உதவி மேயர் திரு. ஆ. துரைராசசிங்கம் திரு. வேலுப்பிள்ளைக்கு பொற்கிழி வழங்கினார்,

ஆத்திப்புலம் கலைமகள் சனசமூகநிலையத்தினர் இதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

## திறப்புவிழா

வேலணை, புதன்

வேலணை கிராமசபையின் புதிய விளையாட்டு மைதானம் இம்மாதம் 6-ம் திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ.ஏ. யோசேப் தலைமையில் யாழ் அரசாங்க அதிபரினால் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

திரு. கே. பி. ஹரன் சிறப்புரையும், கி. ச. தலைவர் திரு. சதாசிவம் வரவேற்புரையும் நிகழ்த்துவர். அன்று நடைபெறும் தாச்சி விளையாட்டினை தீவுப்பகுதி எம் பி. திரு. வ. நவரத்தினமும் கரபந்தாட்டத்தை காரியாதிகாரிஎஸ். வி. பி. நாயகலிங்கமும் ஆரம்பித்துவைப்பர்.



## விலை அதிகரிப்பு

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவில் தற்போது அரிசிவிலை என்றுமில்லாதவாறு ஏறியுள்ளது. ஒரு கொத்து அரிசி ஒருரூபா எழுபத்தைந்து சதம்வரை விற்பனையாகின்றது. அத்துடன் கூப்பன் அரிசி பாவிக்காதவர்கள் தங்கள் கூப்பன் அரிசிகளையும் விற்பனை செய்கின்றனராம். மரக்கறி மீன் ஆகியவையும் விலை ஏறியுள்ளது.


முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட கரிக்கட்டுமூலை தெற்குக் கிராமசபையின் புதிய அலுவலகம் அமைக்கும் விடயத்தில் தலைவருக்கும் அங்கத்தவர்களுக்குமிடையே மாறுபட்ட கருத்து நிலவுவதாகக் கூறப்படுகிறது- காரியாலயத்தை எவ்விடத்தில் அமைப்பது என்பது பற்றி இதுவரை தீர்க்கமான முடிவு எடுக்கப்படவில்லையாம்.

## வங்கிகள் கண்காணிக்கப்படும்

கோட்டை, புதன்

இலங்கையில் இயங்கிவரும் வெளிநாட்டு வங்கிகளை மத்தியவங்கி கண்காணித்து வரும்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கும்பாபிஷேகம்

சண்டிருப்பாய்- கட்டுடை தென்னம்பிள்ளையடைப்பு ஸ்ரீஞான வைரவ சுவாமி கோவிலில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

யாழ்ப்பாண ஐக்கியலாப நிதி அதிபரும் சிறுப்பரு மான கனகசபை கயிலைநாதன் உபயத்தில் நடைபெற்ற இக் கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ சி. நா. சோமஸ்கந்தக் குருக்கள் நடத்தி வைத்தார். இரண்டாவது தினத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகளின் கதாப்பிரசங்கமும் கவிஞர் இ. நாகராஜன் யாத்தஞானவைரவர் ஊஞ்சல்பாடல்நூல் அரங்கேற்றமும் இடம்பெற்றன.

## மரணமானார்

மல்லாகம், புதன்

நச்சுத்திராவகம் அருந்திய நிலையில் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்ட ஈவினையைச் சேர்ந்த 20 வயது புவனேஸ்வரி என்ற இளம் பெண் மரணமானார். மல்லாகம் பொலிஸார் இத் திடீர் மரணம் குறித்து விசாரணை நடாத்தினர்.

## கூப்பன் பறிமுதலாகுமாம்

மட்டுவில், புதன்

விவசாயிகள் தாம் பெற்ற கடனை இம்மாதம் 15ம்திகதிக்குமுன் செலுத்தத் தவறினால், அவர்களது அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்படுமென இங்குள்ள ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது. இச்சங்கத்திலிருந்து 68ம் ஆண்டு நெற்செய்கை விவசாயக்கடனைப் பெற்ற விவசாயிகள், கடன் தொகையை 12 வீத வட்டியுடன் திருப்பிச் செலுத்திவிட வேண்டுமெனச் சங்கம் தெரிவித்துள்ளது.

## சங்குப்பிட்டி — கேரதீவு படகு சேவை சீர்கேடு

### பஸ் பிரயாணிகள் அவதி

புத்தூர், புதன்

சங்குப்பிட்டி-கேரதீவு படகுசேவை மிகவும் சீர்கேடான நிலையில் இயங்கிவருவதாகப் பலத்த புகார் தெரிவிக்கப்படுகிறது. ஒரு படகு மட்டுமே இச்சேவையில் ஈடுபட்டிருப்பதினாலேயே இவ்வித கஷ்டம் நிலவுவதாகக் கூறப்படுகிறது

மன்னாரிலிருந்து காலை 10 மணிக்குப் புறப்படும் இ போ ச பஸ் பிரயாணிகள் பிற்பகல் 12-45 மணிக்கு சங்குப்பிட்டித் துறை முகத்தை வந்தடைகின்றனர். ஆயினும் உடனடியாக கேரதீவுக்குச் செல்ல முடியாத நிலையில் சங்குப்பிட்டியிலேயே காத்து நின்று, கேரதீவில் இருந்து பிற்பகல் 1-25 க்குப் புறப்படும் சாவகச்சேரி பஸ்ஸையும் தவறவிட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். சாவகச்சேரியிலிருந்து கேரதீவுக்கு வரும் பஸ் பிற்பகல் 1-15 க்கு கேரதீவை வந்தடைந்த பின்னரே படகு புறப்பட்டு, பின்னர் சங்குப்பிட்டியிலிருந்து பிரயாணிகளைக் கொண்டுவரவேண்டிய நிலை இருந்துவருகிறதாம். இதனால் காலை 10 மணிக்கு மன்னாரிலிருந்து சங்குப்பிட்டி வழியாக புறப்படும் பிரயாணிகள் யாழ்ப்பாணம் வந்துசேர மாலை 3-30 மணிவரை செல்கிறதாம்.

## பாராட்டுவிழா

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவுக் காரியாதிகாரி கந்தோரில் சென்ற 15 வருடங்களாக கடமையாற்றி வவுனியா தமிழ்ப் பிரிவுக் காரியாதிகாரி கந்தோருக்கு மாற்றலாகிச் செல்லும் திரு எஸ். பொன்னையாவுக்கு பிரதம லிகிதர் திரு இ. செல்வராசா தலைமையில் பிரிவுபசாரம் நடாத்தப்பட்டது. இப்பகுதிக் கிராமசேவையாளர் காரியாதிகாரி அலுவலக உத்தியோகத்தர் இவ்விழாவை ஒழுங்குசெய்திருந்தனர்.

## ஜயந்தி விழாவும் ஆண்டு விழாவும்

உருத்திரபுரம், புதன்

ஸ்ரீலஸ்ரீ மகாதேவ சுவாமிகளின் ஜயந்தி விழாவும் மகாதேவ ஆச்சிரமத்தின் 12-வது ஆண்டு விழாவும் இம்மாதம் 6-ம் திகதிஉருத்திரபுரம் மகாதேவ ஆச்சிரமத்தில் தவத்திரு வடிவேல் சுவாமி தலைமையில் நடைபெறவிருக்கிறது.

வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க

இலங்கைத் தேசிய கயரோக நிவாரண சங்கம்
யாழ்ப்பாணக் கிளை

அமைப்பாளர் பதவி

ஆண்கள் மட்டும் 12-9-69 துக்கு முன்னதாக செயலாளருக்கு விண்ணப்பிக்கவும்.

இதற்குத்தேவையான விபரங்களை புதுக்கச்சேரிக்கு முன்னுலுள்ள அலுவலகத்தில்(Cnap: Regional Centre) காலை 9-30 மணியிலிருந்து 10-30 மணிவரையில் பார்வையிடலாம்.

டீ பி. சுந்தரம்பிள்ளை
செயலாளர்.

1732

61-வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபிராணி
நடித்த
விஜயா சுரேஷ் கம்பைன்ஸ்
குழந்தைக்காக
கதை-வசனம் துறையூர் மூர்த்தி பாடல்கள் கவிஞர் கண்ணதாசன்

"ராதா"
சக்திபூஜா அகர்பத்தி
ஆலயங்கள்
திருமண வைபவங்கள்
இன்ப நிகழ்ச்சிகளிலும்
உங்கள் இல்லங்களை மணம் செய்வது
ராதா சக்திபூஜா அகர்பத்திகளே!

வெடிப்பு நோய், எரிவந்தம்,
கபிலப்புள்ளி நோய், மடல் நோய்
மற்றும் நெற் தொற்று
நோய்களை நீக்கச்
சிறந்த வழி
BAYER
சொதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைக்காக

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!



ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

சிவாஜி — ஜெயலலிதா சௌகார் ஜானகி நடித்த

# எங்க ஊர் ராஜா



யாழ் வின்ஸர் தினசரி 4 காட்சிகள்


ஏ. வி. எம். ராஜன், புஷ்பலதா, நடித்த

# பால்குடம்



## யாழ்நகர் வெலிங்டன்

தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயா தினங்களில்
காலை 10 30 மணிக்கு மெட்னி
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
எல். விஜயலக்ஷ்மி ★ ஏ. கருணாநிதி
பாலமுரளி கிருஷ்ண ★ கீதாஞ்சலி
வாணிஸ்ரீ ★ ஜெயந்தி ★ நிர்மலா
மற்றும் பலர் நடித்த

ஏ. வி. எம். அளிக்கும்

# பக்த பிரகலாதா

(ஈஸ்ட்மென் கலர்)




## புதிய ஜே. பி.

உடுவில், புதன்

உடுவிலைச் சேர்ந்த திரு வீரகத்திப்பிள்ளை சாராளசிங்கம் (வயது 54) சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளார். உடுவில் கிராமசபையின் முதலாம் வட்டார அங்கத்தவரான இவர் உடுவில் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் கிராம முன்னேற்றச் சங்கம், முருகமூர்த்தி வித்தியாசாலைபெற்றோர் ஆசிரியர் சங்கம், ஆலய பரிபாலனசபை ஆகியவற்றில் அங்கத்துவம் வகிக்கிறார். உடுவில் மான் ஆங்கில பாடசாலையின் பழையமாணவரான இவர் சமூகத் தொண்டில் ஈடுபாடுடையவர்.


வல்வெட்டித்துறை

## ரஞ்சனா தியேட்டர்

தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை 10-30
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா நடித்த

# முகூர்த்த நாள்



## வெஸ்லி சினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
போயா, போயா 2-30 மணி
எம். ஜி. ஆர். - கே. ஆர். விஜயா நடித்த

# தொழிலாளி



REGAL JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m
Poya Pre-Poya 4 Shows
Sean Connery,
Claudine Auger
in
THUNDERBALL



MANOHARA
JAFFNA
Daily 4, 7, & 10-00 p.m
Poya, Pre-Poya 4 Shows
WAR AND PEACE



திருமண வைபவங்கள்
இன்ப நிகழ்ச்சிகளிலும்
உங்கள் இல்லங்களை வாசனையால் பரிமளிக்கச் செய்வது
ராதாவின் சக்திபூஜா அகர்பத்திகளே!

ஏக விநியோகஸ்தர்கள்:

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார்தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068.


# இன்றைய பலன்

சோதிடககலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை
ஆவணி மாதம் 19-ந் திகதி (4-9-69)

**மேஷம்-** எவ்விடயத்திலும் நன்றாக ஆலோசித்ததன் பின்பே முடிவெடுக்கவும். ஆணவப்போக்கு மற்றவர்களின் வெறுப்பைத் தேடித்தரும். முகமன் கூறுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

**ரிஷபம்-** அன்னியர்கள் மத்தியில் அதிகம் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். வயிற்றுக்கோளாறுகளுக்கு இடமுண்டு. உணவுவிடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். சிலருக்கு நயனரோகமும் தென்படும்.

**மிதுனம்-** கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும். புதிய கண்டுபிடிப்புகளில் அதிக ஆர்வம் பிறக்கும். டாக்டர்கள் போற்றப்படுவார்கள். தூரத்துச்செய்தியொன்று உற்சாகத்தை ஏற்படுத்தும் நல்லநாள்.

**கடகம்-** வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சிநேகிர் வழியால் கவலைகள் தோன்றக்கூடும். விவசாயிகளாயின் ஏமாற்றத்துக்கு இடமுண்டு. மனத்திடம்வேண்டும்.

**சிம்மம்-** வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் பெருகும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவுகிடைக்கும். ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தவிடயமொன்று உங்களுக்குச் சாதகமான முடிவைத்தரும்.

**கன்னி-** அதிர்ஷ்டகரமான தினம். சிலர் வாழ்க்கையில் திரவியஇலாபத்துக்கும் இடமுண்டு. மனைவாழ்வில் மகிழ்ச்சி தென்படும். வீட்டில் சுபகாரியமொன்று இடம் பெறலாம். பணம் பத்தும் செய்யும்.

**துலாம்-** ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள். பூமிப்பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும். தொழில்புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். சிறுபிணிக்கும் இடமுண்டு. பொறுமை நன்று.

**விருச்சிகம்-** பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்ப பிரச்சினைகளில் சுமுகமான நிலைதென்படும். சுற்றுடலிலும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும். இன்று பொன்னாள்.

**தனுசு-** விபத்துக்கு இடமேற்படும். எதிலும் நிதானத்துடன் நடந்துகொள்ளவும். பலவழிகளிலும் பணம் செலவாகும். சிலர் கடன்படவும் நேரிடலாம். எதிரிகளின் அட்டகாசம் அதிகரிக்கும்.


**மகரம்-** தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. காதலர்களாயின் இன்பமான சூழ்நிலைதென்படும். பெற்றோர்களாயின் ஆதரவும் கிடைக்கும். தொழில்துறையிலும் வெற்றிஉண்டு.

**கும்பம்-** பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். வெளியிடத்தொடர்புகள் பெருகும். கருத்துவேற்றுமைகள் மறைந்து நல்ல முடிவு ஏற்படும். கல்வித்துறையிலும் முன்னேற்றமுண்டு

**மீனம்-** இரக்கசிந்தை மேலிடும். பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரியஇடத்துத் தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடமுண்டு. சிலர் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள். கண்ணியமான தினம்.


சிறந்த வழி

# செரசான்




நெல் விதைகளை மட்டுமன்றி மிளகாய் விதைகளையும் பாதிக்கும் மிளகாய்க் குருமன் போன்ற நோய்கள் விளைச்சலைப் பாதிக்கும். இந்த விதைத் தொற்று வியாதிகளை விரைந்தகற்றச் சிறந்த புதிய சேதன இரசம் கொண்டது செரசான் காளான் நாசினி.

செரசான் எவ்வித விதைகளுக்கும் ஏற்றது. செரசான் கொண்டு பரிகரித்த விதைகள் ஒரு நோயுமற்று ஓங்கி வளர்ந்து பெரு விளைச்சலைத் தரும்.

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது - செரசான், அது, களவு செய்ய முடியாத பக்கெட்டில் கிடைக்கும்.

உற்பத்தியாளர்:
பேயர்
லீவர்கூசன்
மேற்கு ஜெர்மனி

இலங்கையில் விநியோகஸ்தர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P-8159



0231


உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள்
செலுத்தும் பரிபூரண அஞ்சலி

# ஏ. எவ். ரேமண்ட்ஸ்

ஈமக் கிரியை ஏற்பாடுகள்

புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.
147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாடை வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.



ஏ. எவ். ரேமண்ட்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட வியட்னும் அதிபர்

# ஹோ-ஸி-மின் கடுமையாக சுகவீன முற்றிருக்கிருர்

## கிழக்காஸியாவிலேயே பெரிய கம்யூனிஸ்ட் தலைவர்

ஹனேய், செப். 3 வடவியட்னும் அதிபர் ஹோ சி மின் கடுமையான சுகவீன முற்றிருக்கிருர். அவர் உடல்நிலையை வைத்திய பேராசிரியர்களும், பெரிய டாக்டர்களும் இடைவிடாமல் கவனித்துவருகிருர்கள்.

திரு. ஹோ-ஸி மினுக்கு இப்பொழுது 79 வயதாகின்றது. தூரகிழக்கு நாடுகளில் அவர் மிகப்பெரிய கம்யூனிஸ்ட் தலைவர். திரு. ஹோ-சி-மின் கடுமையாகச் சுகவீன முற்றிருப்பதாக அறிவித்த ஹனேய்வாஞெலி அவருடைய சுகவீனம் பற்றிய விபரம் எதுவும் தரவில்லை

### பாரிஸ் பேச்சுக்கள் முன்னேற்றம்

வியட்னும் தகராறுக்கு முடிவுகட்டவென பாரிஸில் நடைபெறும் பேச்சுக்களில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்

வியட்னுமிலிருந்து தனது படைகளை அமெரிக்கா விரைவாக வாபஸ் செய்து கொள்வதன் மூலம் அமைதிப் பேச்சில் ஏற்பட்டுள்ள தேக்கத்தை நீக்குவதற்கு உதவலாம் என்று வட வியட்னும் பிரதம பிரதிநிதி கூறியிருப்பதே பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுவதற்குக் காரணம். அமெரிக்கா நூருயிரம் படைகளை வாபஸ் பெற்றுக் கொண்டால் வடவியட்னுமும் தனது படைகளைக் குறைப்பது பற்றி ஆலோசிக்கும் என்று அவர் கருத்து வெளியிட்டிருக்கிருர்

இதுவரை காலமும் அமெரிக்கா முற்ருகவே வியட்னுமிலிருந்து விலகிக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தி வந்த கம்யூனிஸ்ட் இப்பொழுது சிறிது இறங்கிவந்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

## சிறுவன் கொலைவழக்கு: தீர்ப்பு 8-ம் திகதி

மல்லாகம், புதன்

அச்சுவேலி தம்பாலை சிறுவன் கொலைவழக்கு தீர்ப்பு இம்மாதம் 8-ம் திகதி மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எஸ். ஆனந்த குமாரசாமியிஞல் வழங்கப்படும்.

தம்பாலையைச் சேர்ந்த குமார் ஐயாத்துரை (வயது 9) என்ற சிறுவனை கொலை செய்ததாக காங்கேசன் துறைப் பொலிசாரால் இடைக்காட்டைச்சேர்ந்த எஸ் ஆனந்தராசா, ஆர். நாகேஸ்வரன் என்ற இருவருக்கெதிராக இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இரு எதிரிகளும் ஏற்கனவே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் எஸ். நடராசா ஆஜராஞர். பொலிஸ் தரப்பில் வழக்கை வழக்கறிஞர் ஆர் ஜே. செல்வரத்தினம் நடாத்திஞர்

## நன்னடத்தைப் பிணையில் பெண்

மல்லாகம், புதன்

சங்கிலி திருடிய குற்றத்தை ஒப்புக் கொண்ட பெண் மணியை மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்த குமாரசாமி 18 மாத நன்னடைத்தை பாதுகாவல்பிணையில் செல்ல அனுமதித்தார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழாவில் நான்கு வயதுச் சிறுமியின் கழுத்துச் சங்கிலியைகளவாடியதாககாளியம்மா என்ற பெண்மணிக்கு எதிராக காங்கேசன்துறைப் பொலிசாரால் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

## கசிப்பு தயாரித்தவழக்கில் அபராதம்

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவு நீதிபதி திரு ஆர். நவரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகளில் சட்டவிரோதமாக கசிப்பு தயாரித்ததற்கான குற்றவாளிகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

19 போத்தல் கோடாவையும் கசிப்புத் தயாரிக்கும் பாத்திரங்களையும் வைத்திருந்ததற்காக நீற்ருமனுவல் அந்தோனி என்பவருக்கு ரூபா 300 அபராதம் விதிக்கப்பட்டது.

12 டிரும் கசிப்பு வைத்திருந்ததற்காக மனுவல் அப்பு கந்தறீன் என்பவருக்கு ரூபா 75 அபராதம் விதிக்கப்பட்டது. 18 போத்தல் கோடாவையும் கசிப்புத் தயாரிக்கும் பாத்திரங்களையும் வைத்திருந்ததற்காக வர்ணகுலசூரிய வில்பிரட் என்பவருக்கு ரூபா 250 அபராதம் விதிக்கப்பட்டது.

24 டிரும் கசிப்பு வைத்திருந்ததற்காக வர்ணகுலசூரிய அந்திறிஸ் கேபேட் என்பவருக்கு ரூபா 100 அபராதம் விதிக்கப்பட்டது.

முல்லைத்தீவைச் சேர்ந்த நாயாறு அளம்பில் செம்மலை ஆகிய இடங்களில் மீன்பிடிக்காக வந்திருப்பவர்கள். கசிப்பு வடிசாராயம் ஆகியவற்றை பெருமளவில் தயாரித்து விற்பனை செய்வதாக பொலிசாருக்கு கிடைத்ததகவலை தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

## காந்தி கிராமத்தில் குன்றக்குடிகளார்

மல்லாகம், புதன்

இலங்கை காந்தி சேவா சங்கத்தின் அழைப்பின் பேரில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் இம்மாதம் [illegible] கொழும்புக்கு விஜயம் செய்வார் இவர் இலங்கையில் அக்டோபர் மாதம் [illegible]

## ஆட்சிமன்றத்திலே

நமது சபை நிருபர்
பெரி. சுந்தரலிங்கம்

# 'நாற்றமடிக்கும்' கருவாடு விநியோக ஊழல்கள் என். எம். அம்பலப்படுத்திஞர்

'பட்ஜெட்' என்றவுடன் என். எம்.மும், டாக்டர் என். எம். என்றவுடன் 'பட்ஜெட்'டும் நினைவில் வரக்கூடிய வகையில், டாக்டர் என். எம். பெரேரா பட்ஜெட் விவாதங்களுக்குத் தனது பங்கினைச் செலுத்தியிருக்கிருர்.

ஒரே ஒருமுறைதான் டாக்டர் என். எம் நிதி மந்திரியாக இருந்து தனது 'பட்ஜெட்'டைச் சமர்ப்பித்திருக்கிருர். மற்ற எல்லா வருடங்களிலும் எதிர்க்கட்சி ஆசனங்களில் இருந்து, அரசாங்கத்திற்கு அதிர்ச்சி வைத்தியம் செய்து கொண்டிருக்கிருர் இந்த 'டபிள்' டாக்டர்!

டாக்டர் என். எம். பேசுகிருர் என்ருல் அதுவும் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் பங்கு கொண்டு பேசுகிருர் என்ருல், அரசாங்க இலாகாக்களிலோ கூட்டுத்தாபனங்களிலோ தனியார்துறையிலோ நடைபெறும்தில்லுமுல்லுகளையும், காணப்படும் ஊழல்களையும் தெட்டத்தெளிவாக, தக்க ஆதாரங்களுடன் மாற்ருரும் வியந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையிலே எடுத்துக் கூறுவார் என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்!

இந்த ஆண்டும் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் ராஜாங்க அமைச்சரின் நிதி ஒதுக்கீடுகள்பற்றி குழுநிலையில் பரிசீலனை செய்யப்பட்டபோது கருவாடு வியாபாரத்தில் - கூட்டுறவு பொத்த விற்பனை நிலையத்தினர் கருவாடு விநியோகம் செய்வதில் உள்ள 'நாற்றமடிக்கும்' ஊழல்களை, 'பைல்' கட்டோடு வந்த, ஆதாரங்களோடு எடுத்துரைத்தார்.

நான்கைந்து 'வியாபாரிகளின்' பெயர்களையும், முகவரிகளையும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கருவாட்டு கோட்டாவின் அளவையும் வாசித்துக்காட்டி, கருவாட்டை சாப்பிடுவதற்[illegible] கோட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது டாக்டரின் வியாக்கியானம் -விளக்கம்.'

### 'லேக்ஹவுஸ் பற்றி என். எம்.

கருவாடு வியாபாரத்தில் -விநியோகத்தின் ஊழல்களை எடுத்துரைத்து, அமைச்சர்களையும், அரசாங்கக்கட்சி ஆதரவாளர்களையும் ''மூக்கைப் பிடித்துக் கொண்டிருக்கும்படி'' செய்த டாக்டர் என். எம்., நிதியமைச்சரின் ஒதுக்கீடுகள் பரிசீலனைக்கு வந்தபோது 'லேக்ஹவுஸ் நிறுவனத்தில்' அந்நியச் செலாவணி ஊழல்கள் இருப்பதாகப் பக்கம்பக்கமாகத் தஸ்தாவேஜுகளை வாசித்துக்காட்டி அமைச்சர்களுக்கும், அரசாங்க ஆதரவாளர்களுக்கும் பெரும் தலையிடியைக் கொடுத்தார்.

சுவிட்ஸர்லாந்து வங்கிகள் இரகசியக் கணக்குகளுக்கு -கறுப்புப்பணம் வைத்திருப்பதற்கு -உலகப் புகழ்பெற்ற வங்கிகள் -தனி நபர்களின் பெயர்களில் கணக்குவைத்திருந்தால் அம்பலமாகிவிடுமென்று ஒவ்வொருவருக்கும் இலக்கம் கொடுத்து, கணக்கு வைத்திருப்பது சுவிட்சர்லாந்து வங்கிகளின் தனிச்சிறப்பாகும். ஆனல் இந்த இரகசிய ஏற்பாடுகளையெல்லாம் கடந்து சென்று 'லேக்ஹவுஸ் நிறுவனத்தின் டைரக்டர்கள் சிலர் பெயரில் சுவிட்சர்லாந்து வங்கிகளில் கணக்குகள் இருக்கின்றன' என்று சில கடிதங்களை வாசித்தார் டாக்டர் என் எம்

திரு. ஏலியன் நுகேரா என்பவர், 'லேக்ஹவுஸ்' டைரக்டர்கள் 'சுவிஸ்' வங்கிகளில் கணக்கு வைத்திருப்பது பற்றியும், பத்திரிகைக் காகிதம், புகைப்படப் பொருட்கள் வரவழைப்பதில் அந்நிய செலாவணி விஷயத்தில் நடைபெறும் முறைகேடுகள் பற்றியும் வருமான வரி இலாகாவுக்கும், லண்டனில் இருந்து கடிதங்கள் எழுதி, தகவல் தங்கள் காரியம் முடிந்துவிட்டதோடு நின்று விடுவார்களாகையால் அரசாங்கம் அதையடுத்து என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கின்றது என்பதைதெளிவுபடுத்தவேண்டுமென வலியுறுத்திஞர்.

வருமானவரிஇலாகாலேக்ஹவுஸ் நிர்வாகத்தினரின் இல்லங்களையும் அலுவல்களையும் எந்தவிதப் பயமோ பட்சமோ இன்றி திடீர் முற்றுகையிட்டுப் பரிசோதனை நடத்தியதற்காக வருமான வரி இலாகாவைப் பாராட்டிய என். எம் செலாவணி கட்டுப்பட்டதிகாரி திரு. ஏலியன் நுகேரா லண்டனிலிருந்து தகவல்கள் தெரிவித்து எழுதிய கடிதங்களுக்கே இன்னும் பதிலளிக்காமல் தூங்குவதாகக் கண்டனம் செய்தார்.

இவரைத் தொடர்ந்து பேசிய கொழும்பு மத்திய தொகுதி உறுப்பினர் திரு பீட்டர் கெனமனும், லேக்ஹவுஸ் நிர்வாகத்தினரின் அந்நிய செலாவணி தில்லுமுல்லுகள்பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கின்றது என்பதை இந்த நாடே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறதென்றும் அதற்குக் காரணம் லேக்ஹவுஸ் பத்திரிகைகள் தான் இந்த அரசாங்கத்தை ஆட்சிககுக் கொண்டுவர பெரும் பிரச்சாரம் செய்ததுதான் என்றும் கூறிஞர்.

## தமிழில் அர்ச்சனை

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு கிழக்கு 11-ம் வட்டாரத்திலுள்ள 'தெங்கத்திடல்' என்னும் திருப்பதியில் உள்ள ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் 9-ம் திருவிழாவன்று தமிழில் அர்ச்சனை நடைபெற்றது.

ஆலயத்தின்முன்றலில் புங்குடுதீவு கிழக்கு சிரமதானக் குழுவிஞல் ஆக்கப் பெற்ற பந்தலில் விசேஷமாக அமைக்கப் பெற்ற

# இளைஞர்களின் உணர்ச்சிகளை புரிந்து கொள்ளுங்கள்

## முதியவர்களுக்கு இந்திய ஜனுதிபதியின் அறிவுறுத்தல்

புதுடில்லி, செப்.3

மனித குலத்திற்கான ஒரு நல்லுலகத்தைச் சிருஷ்டிப்பதில் முழுமூச்சாக ஈடுபடும்படி இளைஞர்களை இந்திய ஜனுதிபதி கிரி கேட்டுக் கொண்டார்.

இளைஞர்கள் பழைய சுருதியை மாற்றியமைப்பதோடு திருப்தியடைந்துவிடக்கூடாது. மனிதகுலத்தின் எதிர்காலத்துக்காகப் பாடுபடவேண்டியதின் அவசியத்தையும் அவர்கள் உணரவேண்டும் என்ருர் திரு கிரி.

புதுடில்லியில் முதலாவது காமன்வெல்த் இளைஞர்கள் மகாநாட்டை கிரி ஆரம்பித்துவைத்துப் பேசிஞர்.

முதியவர்கள் இளைஞர்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ளவேண்டும். உலகமெங்கும் இளைஞர்கள் புரட்சி உணர்வு கொண்டிருக்கிருர்கள். அந்த உணர்ச்சியை ஆக்க சக்தியாக திருப்பியாக வேண்டும் என்று திரு. கிரி வலியுறுத்திஞர்.

# மகாத்மாவைப் போன்றபுரட்சிவாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடு திருப்தியடைந்துவி

# மகாத்மாவைப் போன்றபுரட்சிவாதி இந்தியாவில் தோன்றியதில்லை

## சமுதாய மாற்றத்துக்கு அகிம்சைதான் தக்கஆயுதம்

### பாரத கல்வி அமைச்சர் விளக்கம்

சென்னை, செப். 3

**"மகாத்மா காந்தியைக்காட்டிலும் பெரிய புரட்சி வாதியை இந்தியா பார்த்ததே இல்லை பெரிய ஏகாதிபத்தியத்தையே அவர்தலைவணங்கச்செய்தார். அவர் உபயோகித்த அஹிம்சை ஆயுதத்தைப் பயன் படுத்தி சமுதாயத்தில் புரட்சிகரமானமாறுதல்கள் ஏற்படச்செய்ய வேண்டும்."**

இவ்வாறு இந்திய கல்வி அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி' ராவ் மதுரை பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவி· சொற்பொழிவாற்றுகையில் இளைஞர்களுக்கு அறிவுரை கூறினார்.

சர்வ கலாசாலையிலிருந்து வெளியேறும் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் நாட்டு மக்கள் சம்பந்தமாக உள்ள பொறுப்புகளை மத்திய மந்திரி நினைவு படுத்தினார். மக்கள் தாங்கள் செலுத்தும் வரிகளின் மூலம் அவர்களுக்கு உதவியுள்ளனர்என்றார். கொடுக்காமல் பெற்றுக் கொள்வது என்பது ஒழுங்கீனமாகும். தார்மீகப் பாதையில் செல்லவே நாம் அனைவரும் விரும்புகிறோம் என்பது நிச்சயம் என்று திரு ராவ் குறிப்பிட்டார். படித்தவர்கள் சமூக நலனுக்காக தங்கள் திறனைப் பயன் படுத்தவேண்டும் என்று அவர் கூறினார்.

கல்வியின் மூலம் சமூகப் பொறுப்பு உணர்ச்சி ஏற்பட வேண்டும் தனிநபர் உரிமைகளை மட்டுமின்றி, சமூகத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகளையும் கல்வி உணரச் செய்யவேண்டும் என்று மத்திய மந்திரி வலியுறுத்தினார்.

இளைஞர்கள் தனியாகவும் கூட்டாகவும் தங்களதுநடத்தையை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டும். குறைகளை எடுத்துக் கூறும்போது, இளைஞர்கள் அஹிம்சையைப் பின்பற்றுவது அவசியம். வன்செயல் சூழ்நிலையை ஊக்குவிக்க முற்படுவது முற்போக்கு சக்திகள் பலவீனமடையவழிவகுக்கும்;தேசிய ஒருமைப்பாடுக்கு அபாயத்தை ஏற்படுத்தும். எனவே எத்தகைய உன்னத நோக்கமாக இருந்தாலும் சரி, இளைஞர்கள் வன்செயலில் ஈடுபடக்கூடாது. இந்தியாவில் புரட்சி பாரம்பரியம் அஹிம்சையின் அடிப்படையில் அமைந்தது என்பதை இளைஞர்கள் நினைவிற்கொள்ள வேண்டும்.

மகாத்மா காந்தியைக் காட்டிலும் பெரிய புரட்சி வாதியை இந்தியா பார்த்ததே இல்லை. பெரிய ஏகாதிபத்தியத்தையே அவர் தலை வணங்கச் செய்தார். காந்தி நூற்றுண்டு வருடத்தில் நமது மக்கள், பிரதானமாக இளைஞர்கள் அஹிம்சையைப் பின்பற்ற பிரதிக்ஞை எடுத்துகொள்ள வேண்டும். இந்த வலிமை மிக்க ஆயுதத்தைப் பயன்படுத்தி, சமுதாயம் விரும்பும் புரட்சிகரமான மாறுதல்களனைத்தையும் ஏற்படச்செய்யவேண்டும்.

இளைஞர்களையும் முதியவர்களையும் தற்போது எதிர் நோக்கியுள்ள அநேகபிரச்னைகளை விஞ்ஞான ரீதியிலும், ஆக்கபூர்வமாகவும் அணுக வேண்டும். மொழி வெறி ஜாதி வெறி, பிராந்திய உணர்ச்சி, வகுப்புவாதம் போன்ற பல பிரச்னைகள் சோஷலிஸ சமுதாயத்திற்கு மட்டுமின்றி, பொருளாதார முன்னேற்றத்துக்கும் எதிரிகளாகும். இத்தீய சக்திகளை விஞ்ஞான ரீதியிலும், தர்க்க ரீதியிலும், நேர்மையான வழியிலும் மட்டுமே நாம் எதிர்த்துப் போராடமுடியும் அதே சமயத்தில் தொழில் வளர்ச்சியிலும் உதவமுடியும்; இக்கடமையில் படித்தவர்களாக இருந்தபோதிலும் முதியவர்கள் தவறிவிட்டனர். எனவே இளைஞர்கள் காந்திஜி, நேரு சகாப்தத்துக்குச் செல்லவேண்டும். பொருளாதார, சமூக, இதர பிரச்னைகளை விஞ்ஞான ரீதியில் அணுகி நாட்டுக்கு வழிகாட்டவேண்டும் என்று டாக்டர் ராவ் தொடர்ந்து குறிப்பிட்டார்.

**கடும் உழைப்பு**

வறுமையை எதிர்த்துப் போராடவும், பொருளாதார வளர்ச்சியை துரிதப் படுத்தவும், உற்பத்தியைப் பெருக்கவும், பெரும்பகுதி ஏழை மக்களுக்கு கிடைக்கச் செய்யவும் கடும் உழைப்பும், கட்டுப்பாடும் தேவை என்று அவர் வலியுறுத்தினார்.

பொருளாதார அபிவிருத்தியின் மூலமே வேலையின்மை பிரச்னைக்குத் தீர்வு காணமுடியும். இளைஞர்களின் சக்தி பொருளாதார வளர்ச்சியைத்துரிதப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். வீண் கிளர்ச்சிகளில் சக்தியை சிதறவிடக் கூடாதுஎன்று டாக்டர் ராவ் அறிவுறுத்தினார்,

---

## பிரயாணிகள் கஷ்டம்

பருத்தித்துறை, புதன்

இரவு கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன் துறைக்குவரும் புகைவண்டியில் அடிக்கடி வெளிச்சங்கள் அணைவதாலும், குடிவெறியரின் ஆபாசப்பேச்சுக்கலந்த அட்டகாசத்தாலும் பிரயாணிகள் குறிப்பாக பெண்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருவதாக பிரயாணிகள் பலர் புகார் தெரிவிக்கின்றனர். புகையிரதவண்டியில் குடிவகைவிற்பனை தடுக்கப்படல் வேண்டுமென்றும், பொலிஸ் பாதுகாப்பு வேண்டுமென்றும் எம். பிமாரை பலர் வற்புறுத்திவருவதாகவும் தெரிய வருகிறது.

## கோதுமைக்கு லால்பகதூர் பெயர்

புதுடில்லி, செப் 3

பாரதத்தில் புதிதாகப் பயிரிடப்படவிருக்கும் புதிய ரக கோதுமைக்கு லால்பகதூர் என காலஞ்சென்றபிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் பெயரிடப்பட்டுள்ளது,

---

## பெல்கிரேட்டில் குரோமிக்கோ

பெல்கிரேட், செப் 3

சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோ பெல்கிரேட் வந்து சேர்ந்துள்ளார். யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோவோடும் மற்றத் தலைவர்களோடும் அவர் ஆலோசனைகள் நடத்தவிருக்கிறார். இன்று உயர்தர அதிகாரிகளுடன் அவர் பேச்சுக்களைத் தொடங்கினார்.

---

## ச. ச. நிலைய தீர்மானம்

வேலணை, புதன்

வேலணை சனசமூக நிலையங்களின் சமாச நிர்வாக சபைக் கூட்டம் திரு ப இராசரத்தினம் தலைமையில் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்றது. வேலணைப் பகுதிக்கு பிறப்பு இறப்பு பதிவு காரர் ஒருவரை நியமிக்கும் விஷயமாக ஆட்சிமன்ற உறுப்பினருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இம்மாதம் 6-ம் திகதி நடக்கும் விளையாட்டு விழாவிலும் விளையாட்டு மைதான திறப்பு விழாவிலும் இப்பகுதியிலுள்ள சகல சனசமூக நிலையங்களும் பங்குபற்றச் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. விளையாட்டு மைதானத்தைத் திருத்தி கரபந்தாட்ட விளையாட்டுக்குரிய உபகரணங்களையும் தர வேலணைக் கிராம சபை முன்வந்தது குறித்து நன்றி தெரிவிக்கப்பட்டது.

இலங்கை காந்தி சர்வோ சங்கத்தின் அழைப்பின் பேரில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் இம்மாதம் 25ந்திகதி கொழும்புக்கு விஜயஞ்செய்வார் இவர் இலங்கையில் அக்டோபர் மாதம் 10ந்திகதிவரை தங்கி நின்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்.

காந்தி நூற்றுண்டு விழாவையொட்டி அக்கராயன் குளத்தில் சுமார் 3 லட்ச ரூபா செலவில் 300 ஏக்கரில் நிறுவப்படும் காந்தி கிராமம், 25 ஏக்கரில் அமைக்கப்படும் கஸ்தூரி பாய் இல்லம் போன்றவற்றிற்கு சம்பத்து தானம், நிதி சேகரிப்பு வேலைகளில் குன்றக்குடி அடிகளார் முக்கியமாகக் கலந்துகொள்வார்.

நான்கைந்து 'வியாபாரிகளின்' பெயர்களையும், முகவரிகளையும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கருவாட்டு கோட்டாவின் அளவையும் வாசித்துக்காட்டி, கருவாட்டை சாப்பிடுவதற்காக அன்று, வியாபாரத்திற்கென ஓர் அவுன்சில் ஒரு பங்குக் கருவாட்டையேனும் தொட்டிராத இந்தப் பேர்வழிகளுக்குக் "கோட்டா" எப்படிகிடைத்தது என்று வாதாடினார் டாக்டர்.

தேசியமயசேவை அமைச்சர் திரு. வி. ஏ சுகததாசாவின் தொகுதியிலிருந்தே இந்த வியாபாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால், இவர்கள் யூ. என். பி. ஆதரவாளர்கள், ஆகவேதான் கருவாடு வியாபாரத்தைப் பற்றிக் கனவே கண்டிராதவர்களுக்குக் கருவாடுக் பொருட்கள் வரவழைப்பதில் அந்நிய செலாவணி விஷயத்தில் நடைபெறும் முறைகேடுகள் பற்றியும் வருமான வரி இலாகாவுக்கும், லண்டனில் இருந்து கடிதங்கள் எழுதி, தகவல்கள் கொடுத்திருக்கிறார் என்றும் திரு. ஏலியன் நுகேராவின் லண்டன் கடிதங்களின் தகவல்களின் அடிப்படையில் வருமானவரி இலாகா உயர் அதிகாரிகள் 'லேக்ஹவுஸ்' நிர்வாகிகள் இல்லங்களையும் லேக்ஹவுஸ் அலுவலகத்தையும் திடீர் முற்றுகையிட்டு கணக்குப் புத்தகங்களையும் இதர தஸ்தாவேஜுகளையும் ஆராய்ந்தபோது லேக்ஹவுஸ் நிர்வாகத்தினர்ஒப்புக்கொண்டு வருமான வரி இலாகா போடும் வரியைக்கட்டத் தயாராக இருப்பதாகவும் ஆனால் இந்த விஷயத்தைப் பகிரங்கப்படுத்தாமல் இரகசியமாக வைத்திருக்கும்படி கேட்டுக்கொண்டதாகவும் டாக்டர் என் எம் கூறினார்

திருடர்களுக்குள் பிளவு ஏற்படும்போதுதான் எங்களுக்குள் இப்படியான தகவல்கள் கிடைக்கிறது" என்று ஆரம்பித்த என். எம். லேக்ஹவுஸ் பத்திரிகைகள் நாள் தவறாமல் நேர்மையைப் பற்றியும், நாட்டுப்பற்றைப் பற்றியும் பத்தி, பத்தியாய் எழுதிவிட்டு செய்யும் வேலையைப் பாரீர்." 2 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை இந்தத் தில்லுமுல்லு விளையாட்டில் அடங்கியிருக்கிறது.

**அமெரிக்கர்கள்மீதும் குற்றச்சாட்டு**

நான் சொல்வது ஒன்றுமே நாளை டெயிலி நியூஸ் பத்திரிகைகளில் வராது என்று தீர்க்கதரிசனம் கூறிய டாக்டர் என். எம். லேக்ஹவுஸ் நிர்வாகிகளால் இரண்டாயிரம் பவுண்கள் பெறுமதியான கார்ஒன்றை இறக்குமதி செய்திருக்கிறார் என்று தெரிவித்து இதற்கு எப்படி அனுமதி வழங்கப்பட்டது. அனுமதி வழங்கியது யார் என்றும் கேட்டார், அத்துடன் நில்லாது இந்தவிஷயத்தில்சில அமைச்சர்களுக்கும் உடன்பாடு உண்டென்றும் அவர்கள் கண்டும் காணாத வகையில் நடந்துகொண்டுள்ளனர் என்றும் புகார் தெரிவித்தார்.

திரு. ஏலியன் நுகேரா, வருமானவரி அதிகாரிகளுக்கு இந்த ஊழல் பற்றிய தகவல்கள் தெரிவித்து எழுதிய கடிதத்தின் பிரதிகளை வாசித்துக்காட்டிய என். எம் வருமானவரி அதிகாரிகள் வரி வசூலிப்பதோடு

---

தெல்லிப்பழை சகோதரிகள்

## உயிர்தப்பிய ஒரேபெண்மீது தற்கொலை முயற்சி வழக்கு

மல்லாகம், புதன்

கிணற்றில் பாய்ந்து தற்கொலைசெய்ய முயற்சித்ததாகத் தெல்லிப்பழை மேற்கைச் சேர்ந்த எஸ். சாந்தலட்சுமி என்ற இளம் பெண்மீது காங்கேசன் துறைப் பொலிஸார் குற்றஞ்சுமத்தி மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல்செய்துள்ளனர். மல்லாகம் நீதிபதி. திரு எஸ். ஆனந்த குமாரசாமி பிரஸ்தாப இளம் பெண்ணைப் பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் நீதிமன்றத்தில் இம்மாதம் 8ந் திகதி ஆஜராகும்படி உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு இளம் பெண் சகோதரிகள் கிணற்றில் வீழ்ந்து தற்கொலைசெய்ய முயன்று மூவர் மரணமடைந்ததும், ஒருவர் காப்பாற்றப்பட்டதும் தெரிந்ததே. காப்பாற்றப்பட்ட இளம் பெண்மீதே தற்போது பொலிஸார் வழக்குத் தாக்கல்செய்துள்ளனர்.

---

## 'பனம்பொருள் உற்பத்தி தொழிற்சாலை நிறுவ வேண்டும்'

### ஒட்டுவெளியில் முன்னாள் எம். பி.

சாவகச்சேரி, செவ்.

"அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, பண்டைப் பெருமையையும் பனையின் மகிமையையும் உலகறியச் செய்ய ஒட்டுவெளியில் ஒரு பனம் பொருள் உற்பத்தித் தொழிற்சாலையை உருவாக்க வேண்டும்" என ஒட்டுவெளி கரம்பன் தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய முன்னாள் சாவகச்சேரி எம். பி. திரு வி குமாரசாமி கூறினார்.

தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவர் திரு. சி சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வி குமாரசுவாமி தொடர்ந்து பேசுகையில் பண்டைத் தமிழரின் உயிர்ச் சொத்தாக இருந்த பனம் பழம் இன்று மதிப்பற்று மங்கும் தறுவாயில் உள்ளது. பல்சுவை நாகரிகப் பண்டங்கள் தயாரிக்கக் கூடிய பனம் பழத்தையும், இதர பனம் பொருட்களையும் கொண்டு பெரும் செல்வம் தேட முடியும். எனவே ஒட்டுவெளியில் பனம் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை உருவாக்க விரைவில் முயற்சி செய்வதாகக் கூறினார்.

காரியதரிசி திரு. சேனாதிராசா சிவப்பிரகாசம், திரு கந்தையா ஆகியோரும் பேசினர்.

திருவிழாவன்று தமிழில் அர்ச்சனை நடைபெற்றது.

ஆலயத்தின்முன்றலில் புங்குடுதீவு கிழக்கு சிரமதானக் குழுவினால் ஆக்கப் பெற்ற பந்தலில் விசேஷமாக அமைக்கப் பெற்ற மேடையில் முதல்நாள் சங்குகள் ஸ்தாபிக்கப் பெற்று இரவு முழுவதும் அகண்ட நாமபஜனையும் வேதாபாரயணமும் நடைபெற்றது. அடுத்தநாள் யாகபூசை விசேஷ ஹோமம் நடைபெற்றன.

---

## பொன்.கந்தையா நினைவுதினம்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறை முன்னாள் எம். பி. அமரர் பொன். கந்தையாவின் நினைவுதினம் இம் மாதம் 8ம் திகதி உடுப்பிட்டியில் நடைபெற விருக்கிறது.

திரு. பொன். குமாரசாமி தலைமையில் நடக்கவிருக்கும் இக் கூட்டத்தில் திரு. பீற்றர் கெனமன், டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா, செனற்றர் எஸ். நடேசன் ஆகியோர் கலந்துகொள்ள விருக்கின்றனர்.

---

## "மொழிகளுக்கு தாய்மொழி தமிழ்"

மல்லாகம், புதன்

"இந்திய மொழிகளுடன் தமிழைஒப்பிட்டுப் பல அறிஞர்கள் ஆராய்ச்சிகள் செய்தனர். ஆனால் சுவாமி ஞானப்பிரகாசர் ஐரோப்பிய, மேற்காசிய மொழிகளுடன் தமிழை ஒப்பிட்டு ஆராய்ந்து மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழியாக விளங்குவது தமிழ்ப் பாஷையே என்பதை சொல் ஆராய்ச்சி மூலம் நிலை நிறுத்தியுள்ளார். தமிழரின் வாழ்க்கை முறை, பண்பாடுகள் பற்றி வள்ளுவர் பெருமான் உலகிற்கு எடுத்துக் காட்டியது போன்று தமிழ் மொழியின் சிறப்பு, இனிமை, தொன்மை குறித்து ஞானப்பிரகாசர் விளக்கினார்." இவ்வாறு பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி யாழ்ப்பாணம் நவரச நாடகாலய ஆதரவில் நடத்தப்பட்ட ஞானப்பிரகாச சுவாமிகள் நினைவுதினவிழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

கவிஞர் வீ. கந்தவனம் தலைமையில் கவியரங்கும் உருவப்படத் திரைநீக்கம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

'அபிப்பிராயங்களில் வித்தியாசம் இருக்கலாம்; அது பகைமையல்ல. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 19-ந் திகதி (4-9-69)


## புதிய வழி

ஈழத்திலே தமிழ்இனத்தின் எதிர்காலத்தைப்பற்றி தமிழர்களிடையே பொதுவாக பீதியும் அவநம்பிக்கையுமிருப்பது பகிரங்க ரகசியம். அடுத்த பொதுத்தேர்தலில் டட்லியின் ஐக்கியதேசியக் கட்சியோ அல்லது ஸ்ரீமாவோவின் சுதந்திரக்கட்சியோதான் அரசாங்கத்தைஅமைக்கக் கூடும். இந்த இரு கட்சி அரசாங்கங்களுடனே தமிழர் ஏற்கனவே ஒத்துழைத்துப் பார்த்து, ஏமாற்றமடைந்துள்ளனர். இதில் எது இனி அதிகாரத்துக்கு வரினும் தங்களுக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை என்ற மனமுடைந்த நிலையில் ஈழத் தமிழர்களும் அவர்களது தலைவர்களும் திகைத்திருக்கின்றார்கள்,

ஆட்சிமன்றத்திலே வரவு-செலவுத்திட்ட விவாதங்களைப் பொதுவாகப் பார்க்கையில், தமிழ்ப் பிரதிநிதிகள் மனக்கசப்புடனே. பிற கட்சித் தலைவர்களை மட்டுமன்றி. தங்களுக்குள்ளாகவே தாக்கிப் பேசியிருப்பதைக் காண்கிறோம். பத்திரிகைகளிலும் பொதுவாக இதே கதைதான். இவற்றையெல்லாம் பார்க்கையில், இலங்கையின் அரசியல் பிரச்னை தீர்வதற்கோ, சிறப்பாக தமிழருக்கு விமோசனம் பிறப்பதற்கோ ஒருவழியும்காணக்கூடியதாகஇல்லை பொதுத்தேர்தல் நெருக்கி வருவதால்வசைகளும், துவேஷப்பேச்சுக்களும் அதிகரித்து அது கலவரங்களாகவும் உருப்பெறும் ஆபத்து அதிகரிக்கக்கூடும்.

கவலையளிக்கக்கூடிய இச்சமயத்தில் ஒரு சிறிய வெளிச்சம் தெரிவது போல், அரசியல் ஞானியான சிவசுப்பிரமணியஐயா அவர்கள் 'ஈழநாடு' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் சிலமுக்கியமான புதிய யோசனைகளைக் கூறியுள்ளார். அதன்விவரங்கள் நேற்று வெளியாகியுள்ளதை நேயர்கள் படித்திருக்கக் கூடும். அவை இன்றைய பிரச்னைகளை மேலெழுந்தவாரியாக அன்றி, அவற்றின்

முறைகளையே கையாளவேண்டுமென்றும் அவர் கூறுவதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்றாலும், இன்றையஅரசியல் திட்டத்தை அடிப்படையாகக்கொண்ட பொதுத்தேர்தலும் நெருங்கிவருவதால், ஏற்கெனவேஒருவருக் கொருவர் வசைபொழியும் படலம் தீவிரமாக ஆரம்பமாகிவிட்டது. மரணச்சடங்குகளிலும் எதிர்ப்புப் பிரசாரம் நடக்கின்றது இந்நிலையில் ஐயா அவர்கள் கூறும் உபதேசங்கள் செவிடன் காதில் ஊதிய சங்குநாதமாகலாம். என்றாலும் நம நாடு அரசியல்சேற்றிலிருந்து விடுபட்டு மக்கள் முன்னேற வேண்டுமென்ற உண்மையான தேசாபிமான நோக்கமுள்ள தலைவர்கள் வெளியில் சொல்லாவிடினும் இவற்றை மனதுக்குள்ளாக வரவேற்று ஆதரிக்கவே செய்வர்.

கட்சிமுறையை ஒழிக்க வேண்டுமென்றும், 'காபினெட்' ஆட்சிமுறையை மாற்றி அதற்குப்பதில் முன்னிருந்த கமிட்டி முறையை ஏற்படுத்த வேண்டுமென்றும் செனேட்சபை அமைப்பில் பெரிய திருத்தங்கள் செய்ய வேண்டுமென்றும் கூறப்பட்டுள்ள யோசனைகள் பற்றி கருத்துவேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் சென்ற இருபது வருட அனுபவத்தில் கண்ட குறைகளைசற்றே கவனித்தால், மேற்குறித்த யோசனைகளையும் யாரும் தவறானவை என்று எதிர்க்கமாட்டார்கள். எல்லா முக்கிய அரசியல் தலைவர்களையும் கட்சிமுதலிய கட்டுப்பாடுகளை விட்டு, நாட்டின் மேலான நன்மையையே முக்கியமாகக் கருதி இவ்விஷயங்களைபற்றி விவாதிக்க, பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவரும் சேர்ந்து உடன் முயற்சி எடுப்பின், நாட்டுப்பொதுமக்களின் மேலான நன்றிக்கு அவ்விருவரும் பாத்திரமாவார்கள்.

இது எப்படியாயினும், இப்போதுள்ள அரசியல் அமைப்பினால் அதிகம் அவதிப்படுபவர்கள் தமிழினத்தவர்

# விபுலானந்தர் யாழ். நூல் எழுதாவிட்டால் யாழ். பற்றி ஆராய்ச்சியே எழுந்திருக்காது

## நுண்கலைச் செல்வர் இராகவன் பேட்டி

விபுலானந்தர் யாழ்நூல் எழுதியிருக்காவிட்டால் யாழைப் பற்றிய ஆராய்ச்சியேஎழுந்திருக்காது என்று இப்பொழுது கொழும்பு வந்திருக்கும் தமிழக அறிஞர் நுண்கலைச் செல்வர் திரு.அ. இராகவன் கூறினார்.

கொழும்புஇறக்குமதி ஏற்றுமதிகட்டுப் பாட்டுத்திணைக்களத் தமிழ் இலக்கியமன்றம் இம்மாதம் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் எடுக்கும் பாரதி விழாவில் கலந்துரையாற்றுவதற்காக திரு இராகவன் வந்துள்ளார்.

இசைக்கருவிகளில் முக்கியமான யாழின் உருவம் முன்பு கிடைக்கவில்லையென்றும் யாழின் உண்மையான உருவத்தைத் தமிழர்கள் காணவில்லையென்றும் இப்போதுதான் யாழின் சிற்பங்கள் பல கிடைக்கப் பெற்றுள்ளதாகவும். யாழின் உருவம் பர்மாவிலிருந்து சென்னைக்குக் கொண்டுவரப்பட்டதாகவும் திரு. இராகவன் என்னிடம் தெரிவித்தார்.

''யாழ்ப்பாண மாநகர சபை மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள யாழின்உருவமும் நிச்சயம்பிழையாதேன என கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்தார்.

அப்படியானால் யாழின் உண்மையான உருவம்தான் என்ன?'

''அதுஎன்னிடம் இருக்கின்றது. நீண்ட காலஆராய்ச்சிகளின் பின்னர் கிடைத்துள்ளது. வேண்டுமானால் உண்மையான உருவமுள்ள யாழ்களைத் தமிழகத்திலிருந்து வரவழைத்து அவற்றை இயக்கியும் காண்பிக்கிறேன்

''விபுலானந்தர் யாழ்நூல் எழுதியிருக்காவிட்டால் அதைப்பற்றிய ஆராச்ய்யேசிஎழுந்திருக்காது சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்டதைப் பார்த்தே விபுலானந்தர் யாழுக்கு உருவம் கொடுத்தாரே தவிர அப்போது யாழின் உண்மையான உருவம் அவருக்குக் கிடைக்கவேயில்லை''

''திரு. எம். ஏ. கிஷா[illegible]ரைச் செயலாளராகவும் திரு. ஏ சி நடராஜாவைத் தலைவராகவும் கொண்ட வரவேற்க் கமிட்டியார் என்னையும் எனது கலை[illegible]

(தோற்கருவி) பற்றி ஆராய்ச்சி செய்ய விருக்கின்றேன் தமிழ் நாட்டைவிட இங்கே முரசுகள்அதிகம் அத்தோடு காசுகளையும் ஆராய விருக்கின்றேன் மேலும் ஈழத்தில் எனக்கு ஈடுபாடு அதிகம் திரு ஆனந்தகுமாரசாமியின் நூல்களைஆராய்வதில் விருப்பமும் கவனமும் அதிகம்''என சொன்னதிரு இராகவன் தான்எழுதியதிரு ஆனந்தகுமாரசுவாமி பற்றிய ஆராய்ச்சி நூலொன்றையும் என்னிடம் காட்டினார்

திரு ஆனந்தகுமாரசுவாமி பற்றித்தாம் எழுதுவதற்கு முக்கிய காரணமும் உண்டு என்றார் அவர்

தாமரை, தமிழக சாவகக் கலைத்தொடர்பு, நம்நாட்டுக கப்பற்கலை போன்ற பெரிய நூல்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

இதில் தமிழர் பண்பாட்டில் தாமரை என்ற நூல் மதுரை பல்கலைக்கழகத்தில் பி ஏ, பீ எஸ் சி வகுப்புகளுக்குப் பாடப்புத்தகமாக உள்ளது''

ஈழத்தவராகிய நாம் பெருமைப்படத் தக்க விஷயம் என்னவென்றால் திரு. இராகவன் தமது தமிழ் நாட்டுத் 'திருவிளக்குகள்' என்ற நூலை ஈழத்தைச் சேர்ந்தவரும் இலங்கை தொல்பொருள் ஆராச்சித் துறை உதவிக்கமிஷனராக

### ஆனந்தகுமாரசுவாமி பற்றிய பிழையான கருத்தைமாற்ற முயற்சி

அது என்ன? தமிழ்நாடு இலக்கிய வட்டம் என்ற பத்திரிகையில் அதன் ஆசியர் க நா சுப்பிரமணியம் ஆனத்தகுமாரசுவாமி பற்றி எழுதுகையில் ஓர் ஆங்கிலேயனுக்கும் சிங்களப் பெண்ணுக்கும் பிறந்தவர் என்று தவருக எழுதியிருந்தார் திரு ஆனந்தகுமாரசுவாமியின் சேவைகள் அவரது ஆராய்வுகள் பற்றி எதுவுமே குறிப்பிடாமல் தமிழக மக்கள் அவரைப் பற்றித் தப்பான அபிப்பிராயம் கொள்ளத் தக்க வகையில் திரு க நா சுப்பிரமணியம் எழுதியிருந்தார் இதைத் தெளிவு படுத்துமுகமாகவும் தமிழகத்தில்

திரு ஆனந்தகுமாரசுவாமி பற்றித் தெளிவான சிந்தனையை ஏற்படுத்து முகமாகவுமே நான் அவரைப் பற்றிய எனது ஆராய்ச்சியை எழுதினேன்; அவரது பெருந்தன்மையையும் நல்ல நோக்கத்தையும் பாராட்டினேன்

இசைத்தூண்கள் என்ற தமது நூல் 'செக்' மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த திரு இராகவன் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் உள்ள இசைத்தூண்களைப் பார்த்தீர்களா? என்று கேட்டார்.

ஆமாம்; ஒருதடவை தமிழகம் [illegible] மதுரையில் அத்தூண்களைப் பார்த்தேன். தொட்டுப்

இருந்தவருமான திரு சு. சண்முகநாதன் அவர்களுக்கே அர்ப்பணம் செய்திருந்தார். திரு சண்முகநாதனின் படத்தையும் முகப்பில் போட்டு அவரைப் பற்றித் தாம் குறிப்பிட்டுள்ளதை இவர் எனக்குக் காட்டினார்

அப்படி ஒரு ஈழத்தவரைப் பெருமைப்படுத்த வேண்டிய காரணம் என்ன என்று கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதில் இதுதான்.

''முதன் முதல் 200 விளக்குகள் சேகரித்து ஆராய்ச்சி செய்திருந்தார். ஈழத்தின் தலைசிறந்த கட்டிடக்கலைஞர் இந்தியாவிலே கூட இவரையொத்த கலைஞர்கள் கிடையாது. அவரது வீட்டுப்படிப் பகத்தில் பெறுமதி வாய்ந்த ஆராய்சி நூல்கள் பல உள்ளன. அவர் இப்போது காலமாகிவிட்டார் என்று அறிந்தேன். அவரது மனைவியாருக்கே நான் இந்நூலைத் தமது கணவருக்குச் சமர்ப்பணம் செய்தது தெரியாது. அவரைச்சந்தித்து ஒரு பிரதி அன்பளிப்புச் செய்யப்போகிறேன். கலையாலும், நுண்கலை தொல்பொருள் ஆராய்வு உணர்வாலும் உயர்ந்தஇந்த ஈழத்துக் குடும்பத்தைக் கௌரவிப்பதில் நான் தனிப் பெருமையடைகிறேன்.

பேட்டிகண்டவர்

**நெல்லை. க. பேரன்**

களது இல்லத்தில் வைத்து நுண்கலைச்செல்வரை நான் சந்தித்து உரையாடினேன்

திரு. இராகவன் ஈழத்திற்குப் புதியவரல்லர். ஈழத்தில் பல காலம் வாழ்ந்த இவர் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் தலைமையில் இயங்கிய சரித்திர ஆராய்வுக் குழுவில் உறுப்பினராக இருந்தவர். கொழும்பில்இருக்கும்போது பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை இவர் எழுதினார். அச்சகமொன்றையும் இவர் நடத்தினார்.

தனிநாயகம் அடிகளார் தான் தம்மைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பி அழைத்ததாக அவர் சொன்னார்.

## ''ஒத்துழைப்பு அவசியம்'

ஊர்காவறுறை, புதன்

''சிங்கள இனத்தவர்களை எமது விரோதிகளாக சிலர் கருதுவதினாலேயே நாம் எமது உரிமைகளைப் பெற முடியாதநிலையில் இருக்கிறோம். அவர்களுடன் நாம் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும். இதனால் நாம் இழந்த உரிமைகளைச் சுலபமாகப் பெற்றுக் கொள்ள முடியும்'' என ஊர்காவற்றுறை மையிலப்புலம் சோழாவத்தையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் வழக்கறிஞர் ப. கதிரவேலு கூறினார். வேலணை முன்னாள் கிராம சபைத்தலைவர் திரு ப. கந்தசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

''எமது தமிழ்த் தலைவர்களின் எதிர்க்கூச்சலினாலேயே சிங்களஇனம் எம்மை வேறுகண்கொண்டு பார்க்கிறது. எமது தமிழ்ப்பிரதேசம் பொருளாதாரத்தில் தன்னிறைவுபெற்று சிங்கள இனத்தவரின் ஒத்தாசையைப் பெற்று, எமது இனத்தின் உரிமைகளைப் பெற நாம் முயலவேண்டும்' என அவர் சொன்னார்

திரு. அ. சுந்தரலிங்கம், மா. க. வைத்தியநாதன், மு. சின்னத்துரை உட்படப் பலர் பேசினர்.

......

20 கோடி ரூபா செலவில்

## எண்ணை

# ஐயாறன் எழுதுவது

இப்போது நல்லூர்க் கந்தனின் திருவிழா மிகச் சிறப்பாக நடக்கிறது. குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே. இவ்வருடத்தில் புதுவிசேஷம் என்னவெனில், மக்களுக்கு வசதியான முறையிலே கோவிலில் சில திருத்தங்களைச் செய்துள்ளதுதான்.

முன்னெல்லாம் வசந்த மண்டப பூசையைப் பார்ப்பதென்றால் பெரும் அவதி. ஒரே தள்ளுமுள்ளுகள். காற்றில்லாமல் தேகமெல்லாம் வியர்வை சொட்டும். ஆனால் இப்போதோ கோயிலின் தென்மேற்குப் பகுதியை விஸ்தரித்து, புதிதாகப் பெரிய வாசலை அமைத்துள்ளனர். சுகமான தென்றல் வீசுகிறது. தெருவிலிருந்தே ஏராளமானவர்கள், சர்வாபரண பூஷிதரான அழகு முருகனின் ஆராதனையை வசதியாகத் தரிசிக்கக்கூடியதாகவுள்ளது. இன்னும் பல அபிவிருத்திகளைச் செய்யப் போகிறார்களாம்!

சாதி பேதமின்றி''சேர வாரும் சகத்தீரே'' என்று பேரருள் செய்துள்ள கருணை மூர்த்தியான இந்தக்கந்தன், மக்களுக்குப் புதுப்புது வசதிகளையெல்லாம் செய்துவருகின்றான். நமது சமூக தேவைகளுக்கு நாம் அரசாங்கத்தையே நம்பி இராமல் அன்பு வழியிலே எல்லாருக்கும் முன்மாதிரியாகச்செய்து வழிகாட்ட அந்த முருகன் அருள்செய்வாராக!

0 0 0

நல்லூர்க் கோவில் சூழ்நிலையெல்லாம் ''புனித நகராகி'' வருவதைக் கண்டேன். நாவலர் பெருமான் மீண்டும் உயிர்த்தெழுந்து வந்ததுபோல், பெரிய புராணத்தை வைத்துக் கொண்டு தென்புறத்திலிருந்து, பக்தர்களுக்கெல்லாம் பேசாமல் பேசி உபதேசிக்கின்றார். மண்டப வேலைகள் துரிதமாக நடந்துவருகின்றன. மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து வணங்கி தரிசிக்கிறார்கள்.

அதற்குச் சற்றுத் தூரத்திலே வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப் பூத பரம்பரை பொலியப்புனிதவாய் மலர்ந்தழுத திருஞானசம்பந்த சுவாமிகள் புதிதாக வந்து கோவில் கொண்டிருக்கிறார். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் நல்லூர்க் கிளை ஆதீனம், சிவன்கோயிலுக்

ஆதீனம் நல்ல நல்ல சமய சமூகப் பணிகளைச் செய்ய காத்திருப்பதற்கான நம்பிக்கையளிப்பதாகவுள்ளது

பலவருடங்களாகப் பாழாகிக்கிடந்த அந்த இடம் ஞானசம்பந்தப் பெருமான் வந்ததும் புதுப்பொலிவும் புனிதமும் பெற்றுள்ளது. இன்னும் செய்யவேண்டிய அபிவிருத்திகள் பல உள்ளன. சைவத்தையும், தமிழையும் வளர்க்க நல்ல பணி புரிந்துவரும் இந்த ஸ்தாபனத்துக்கு, மக்கள் தாராளமாக நன்கொடைகள் அளித்து வளர்க்க எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவது உறுதி,

0 0 0

அதே ஆதீனத்திலிருந்து ''அருளமுதம்'' பத்திரிகை மீண்டும் புதிய வடிவில், சமயத்தொண்டு செய்ய வெளியாகியிருக்கின்றது. ''மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க'' நல்ல பிரச்சாரம் அவசியம். முதலில் சைவசமூகததுக்கே சைவத்தின் நோக்கமும் இன்னல்கள் தீர்ந்து பேரின்பமடையக்கூடியவழியும் தெரியாமலுள்ளது. வெறும் பேச்சும், பூச்சும் வெளிஆர்ப்பாட்டமும்தான் சைவம் என்றுநினைக்கின்றனர். சைவர்கள் அன்புவழியில்வாழ்ந்து அருளமுதத்தைப் பெற்று இன்புற, இந்த மாஸிகை நல்ல பணி செய்யின், மக்களின் ஆதரவை அமோகமாகப் பெற்று வளர முடியும்.

0 0 0

''வெளியிலே இருந்து தெய்வத்துக்குப் புறம்பே வாழ்வதை விட சிறைக்குள்ளாக தெய்வத்துடன் உறவு கொண்டு வாழ்வது மேல்'' என்றுபண்டாரநாயககொலை வழக்கில் கைதியாகி விடுதலையடைந்தவரும், அமைச்சராக இருந்தவருமான திருமதி விமலா விஜயவர்த்தன, பௌத்தத்திலிருந்து மதம் மாறியபின். கொழும்பிலே ஒரு கிறிஸ்தவாலயத்திலிருந்து பேசுகையில் தம் அனுபவத்தை இப்படிக் குறிப்பிட்டிருக்கின்றார் உண்மைதான்.

மற்றச் சமயத்தவர்களுக்கு உள்ளதுபோல் பௌத்தர்களுக்கு வாழ்க்கையிலே ''கடவுள்'' என்ற ஒரு ''பிடி'' இல்லாமலுள்ளதே என்று காலஞ்சென்ற பெரிய பண்டாரநாயகா ஒரு சமயம் குறைப்பட்டார். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான புதிய யோசனைகளை கூறியுள்ளார். அதன்விவரங்கள் நேற்று வெளியிடியுள்ளதை நேயர்கள் படித்திருக்கக் கூடும். அவை இன்றைய பிரச்சினைகளை மேலெழுந்தவாரியாக அன்றி, அவற்றின் அடிப்படையை ஆழ்ந்து கவனித்து, அதற்கான பரிகாரங்களைக் கூறுவதாக உள்ளனவாகையாலும், அனுபவமிக்க அவர் கட்சி அரசியலுக்கு அப்பால் நின்று தேசாபிமானத்துடன் இவற்றைக் கூறுவதாலும், தமிழ்த் தலைவர்கள் மட்டுமன்றி, மற்றத் தலைவர்களும் இவற்றை அலட்சியம் செய்து ஒதுக்காமல், கவனமாகப் பரிசீலனை செய்து, கூடுமானவரை காரியத்தை நிறைவேற்ற முயற்சிப்பது பல விதங்களிலும் நன்மையாகும்.

பல சமூகத்தவரிடையேயும், தமிழ்த் தலைவர்களிடையிலும் நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் ஏற்படவேண்டுமென்றும், துவேஷம் இருக்கப்படாதென்றும் ஸினர்சிகளும் நேரடி நடவடிக்கைகளும் இருக்கப்படாதென்றும், அமைதியான ஜனநாயக

பின், நாட்டுமக்களனைவரும் மேலான நன்றிக்கு அவ்விருவரும் பாத்திரமாவார்கள்.

இது எப்படியாயினும், இப்போதுள்ள அரசியல் அமைப்பினுள் அதிகம் அவதிப்படுபவர்கள் தமிழினத்தவர்களே. அவர்களின் தலைவர்கள், வருங்கிறதேர்தலை முன்னிட்டு குரோதங்களையும் தாக்குதல்களையும் வளர்த்துக் கொள்ளுவதை நிறுத்திக்கொண்டு, தமிழரின் நன்மையைக் கருதி மேற்குறித்த யோசனைகளையும் நிதானமாக அலோசித்து, அவர்கள் முதலில் சேர்ந்து முன்வர முடியாதா? கட்சிப்போட்டிகளைமறந்து, தங்கள் இனத்தின் மேலான நன்மையையும் அதன்மூலம் நாட்டின் நன்மையையும் கருதி தமிழ்த் தலைவர்கள் தீர்க்கதரிசனத்துடனும், அரசியல் ஞானத்துடனும் தியாக புத்தியுடனும் இப்போது முன்வருவதாயின் தமிழ் இனத்தின் இன்றைய சங்கடங்களும் திகைப்பும் தீரவும், நாட்டின் அரசியல் பிரச்சினைக்கு சுமுகமான புதிய வழி காணவும் முடியுமல்லவா?

# பேரிடும்பை போக்கும் பெரிய வளவுமுருகன்

— கவிமணி க. தெய்வேந்திரம் —

''கருணை கூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகமுய்ய''

பூவுலக ஜீவராசிகளுக்குத் தன் அனுக்கிரகத்தைப் பாலிக்கும் வண்ணம் இறைவன் பூமியில்கொண்டான் என்பது நம்பிக்கை. இவ்வாறே முருகன் அடியார்களுக்கு அருள்வழங்க உலகின் பல இடங்களிலும் கோவில் கொண்டான். தனக்கேற்ற இடங்களைத் திருமால்மருகன் தேர்ந்துகொண்டவற்றில் சங்கானை கிழக்கிலுள்ள பெரிய வளவுமொன்று. இங்கு முருகன் கோவில் கொண்டதிலிருந்து இவ்வாலயம் பெரியவளவு முருகன் கோவிலென்று அழைக்கப்படலாயிற்று.

பெரியவளவு முருகன் கோவிலில் வருடந்தோறும் அலங்கார உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது பத்து தினங்கள் நடைபெறும் இவ் விழாக்காலத்தில் இக் கிராமமே புத்தொளிபெற்றுப் புனிதம் தவழும், அதி காலையிலேயே அடியார்கள் துயிலெழுந்து சேம நிஷ்டைகளைத் தவறாது ஆற்றி, கந்தா முருகா, கடம்பா என்றவாறே பாடும், பழமும், தேங்கும், இளநீரும் மற்றும் வாசனைத்திரவியங்களும் கையிலேந்தி பெரியவளவுநோக்கிப் படையெடுப்பர், சங்கரன், பாலன், சண்முகசீலன் சக்திப் பாம் பொருளாகவும் கருணைப் பெருமிதமாகவும், காவற்பரம் பொருளாகவும் சிந்திக்கும் அன்பர்கள் சந்திக்கும் கந்தக் கதிரொளியாகவும் பெரிய வளவினிலே முருகன் தெய்வம் புரியக்கண்டு அடியார்களெல்லாம் ஆனந்தக் கூத்தாடுவர். அறியாத வரம்பெற்ற அசுரனை அழித்த அருள்வள்ளலின் திருவடிகளைப் பெற்று உய்வான் வேண்டி திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, குருமந்திரம் கந்தபுராணம், கந்தரலங்காரம், சந்திரன் பூதி போன்ற பாடல்களை பாடிப் பணிவர்.

இவ்வாண்டு பெரியவளவு முருகன் கோவில் அலங்கார உற்சவம் மிக்க சிறப்புடன் பக்திமய சூழ்நிலையில் நடந்துமுடிந்தது இன்று பூங்காவனத் திருவிழாவாகும்

ருக்குக் கிடைக்கவேயில்லை

“திரு. எம். ஏ. கிஷோரைச் செயலாளராகவும் திரு. ஏ சி நடராஜாவைத் தலைவராகவும் கொண்ட வரவேற்க் கமிட்டியார் என்னையும் எனது கலைச் சேவையையும் பாராட்டி ஈழத்துக்கு வரும்படி அழைத்தனர் ஆனாலும் இங்கு வந்து தங்கும் இடைக்காலமான சுமார் ஒருமாத காலத்தில் ஈழத்து முரசுகள்

காங்கிரஸ் மகாநாடு

## சாவகச்சேரியில் நடத்த கோரிக்கை

யாழ்ப்பாணம். வியா.

தமிழ்க் காங்கிரஸ் வருடாந்த மகாநாட்டை இம்முறை சாவகச்சேரியில் நடாத்தும்படி, சாவகச்சேரி காங்கிரஸ் கிளை, தலைமைப்பீடத்தைக் கோரவிருப்பதாக கமிட்டி உறுப்பினர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

சாவகச்சேரிக் கிளையின் வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 9-ம் திகதி சாவகச்சேரியில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவிருக்கிறது இக்கூட்டத்தில் உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

காங்கிரஸ் வருடாந்தமகாநாடு பற்றி ஆலோசனை செய்ய தமிழ்க்காங்கிரஸ் கமிட்டி இம்மாதம் 9ம் திகதி தலைமைக் காரியாலயத்தில் கூடுகிறது. இக்கூட்டத்தில் வருடாந்த மகாநாட்டிற்கான இடமும் தேதியும் தீர்மானிக்கப்படவிருக்கிறது.

காங்கிரஸ் அபேட்சகர்கள் பற்றியும், இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

மற்றெல்லாக் கோவில்களிலும் பூங்காவனத் திருவிழா தேர் தீர்த்த உற்சவம் நடந்துமுடிந்த மறுதினமே நடைபெறுவது வழக்கம் ஆனால் பெரியவளவு முருகன் ஆலயத்தில் அவ்வாறில்லாமல் தீர்த்த உற்சவம் முடிந்து எட்டாவது நாளில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

தன்பக்தர்களின் அரோகரா சப்தங்கள் ஒலிக்க, மங்கலவாத்தியங்கள் முழங்க பெரியவளவு முருகன் இன்று பூங்காவனத்தில் திருக்கல்யாணம் செய்கின்றார் அவரது மகிழ்ச்சியில் ஊரே திளைக்கும்; தழைக்கும்

“சத்திக்கனலே சமர்
செய் பகையைக்
குத்திக் குமுறும்
கொடிவேற்கரனே
தொத்தித் தொடரும்
துயரும் கழைவாய்
பக்தர்க்கருளும்
பரமன் மகனே.

...பார்த்திர்களா? என்று கேட்டார்.

ஆமாம்; ஒருதடவை தமிழகம் சென்றபோது மதுரையில் அத்தூண்களைப் பார்த்தேன். தொட்டுப் பார்க்கமுடியாதவாறு கம்பிவேலி போட்டிருந்தார்கள். தூரநின்று சிறு கல்லால் எறிந்து சத்தம் எழுப்பி மகிழ்ந்தேன் என்றேன். அப்படியா என்று சிரித்தபடியே அவர் ‘மதுரை திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி, சுசீந்திரம் ஆகிய இடங்களில் இதே போன்ற இசைத்தூண்கள் உள்ளன. இவற்றின் கலைத்தன்மை பற்றி விளக்கக் டிய எனது டேப் ரெகோடர்களைக் கொண்டுவர நினைத்தேன். ஆனால் இலங்கை கஷ்டம்ஸ் பகுதியினரின் கெடுபிடிகளுக்குப் பயந்தே கொண்டுவரவில்லை. எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுகிறார்கள்'' என்று கவலைப்பட்டார்.

சினிமா, சிறுகதை, நாவல் நாடகம் என்பனவற்றில் தமக்குக் கொஞ்சமும் ஆர்வம் இல்லை என்று தெரிவித்தார். திரு இராகவன் ஆபாச ஏடுகளையும் திரைப் படங்களையும் அவர் கண்டித்தார். ஆராய்ச்சிதான் இவ து முக்கியதுறை. தமது கலை - தொல்பொருள் ஆராய்வு முயற்சிகளைப் பற்றி அயல்நாடான இலங்கைக்கு — இங்குள்ள பத்திரிகைகளுக்கு அதிகம் தெரியாது — என்று சொன்ன இவர் இந்தியாவிலுள்ள அல்லது அமெரிக்காவிலுள்ள நூலகத்தில் ஆராய்வாளர்களது நூல்களைத் தெரிவுசெய்து ஆசிரியர்களைப்பற்றிய அடிக்குறிப்புக்களுடன் விளக்கமான செய்திகளைப்போட்டு மறுபிரசுரம் செய்கிறார்கள், நமது திறமைகளை மற்றவர்கள்சொல்லத்தான் கேட்டுத் தெரிகிறோமே தவிர நாமாகவே தேடிப்போற்றுவதில்லை எனச் சொல்லிக் கவலைப்பட்டார்.

கேள்வி; தமிழகத்தின் என்னவிதமான துறைகளில் ஈடுபட்டீர்கள்? ஏதாவது நூல்கள் எழுதியுள்ளீர்களா?

### விளக்கு ஆராய்ச்சி

‘தமிழகத்தில்கலைத்துறையில் தனிப்பட ஆராய்ச்சி செய்தேன். தமிழக அரசு அங்கு 20 துறைகளில் வெளிவரும் சிறந்தபுத்தகங்களுக்குப் பரிசுகொடுப்பது வழக்கம். அதற்கான மத்தியஸ்தர்களை நாங்களே தெரிவுசெய்வோம். ஒரு புஸ்தகத்தைப் பரிசீலிப்பதற்கு மூன்று மத்தியஸ்தர்கள் இதற்கான பொதுக்குழுவில் நானும் ஒரு உறுப்பினன்: ஏராளமான ஆராய்ச்சி நூல்களை எழுதினேன். தமிழ்நாட்டுத் திருவிளக்குகள், தமிழர் பண்பாட்டில்

ஈழத்து... கௌரவிப்பதில் நான் தனிப் பெருமையடைகிறேன்.

பேட்டிகண்டவர்

## நெல்லை. க. பேரன்

இவர் மேலும் [hole]நருவின் நினைவுகள், பெண்களும்சமுதாயமும், கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? தமிழ் நாட்டு அணிகலன்கள், இறைவனின் எண்வகை வடிவங்கள், வரலாற்றுப் பாங்கில் வளர்ச்சி பெற்ற இசையும் யாழும், தமிழர் பண்பாட்டில் யானை, பண்டைத் தமிழரும் படைக்கலங்களும் என்பன போன்ற பல நூல்களையும் எழுதியுள்ளார்.

மலேசியாவில் நடைபெற்ற மகாநாட்டில் தமிழ் நாடு நாணயங்கள் பற்றிய எனது ஆராய்ச்சிக் கட்டுரை படிக்கப்பட்டு இப்போது முதல் தொகுதி புத்தகமும் வெளிவந்துள்ளது. சென்னை மகாநாட்டில் தமிழரின் கட்டிடக்கலையில்.. என்ற கட்டுரை எழுதினேன். அது படிக்கப்படவில்லை. ஆனால் இம்மகாநாட்டில் ஊர்வலமாக வந்த கப்பல் காட்சியில் 48 வகை வர்ண (ஓயில் பெயிண்டிங்ஸ்) வேலைகள் செய்துகொடுத்தேன்'' என உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு பற்றி கேட்டதற்குப் பதிலளித்தார்.

''தமிழக பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களும், கலைஞர்களும், இசைப்புலவர்களும், சிற்பிகளும் சேர்ந்து பாளையங் கொட்டையில் ‘கலைக்கழகம்’ ஒன்றை ஆரம்பித்திருக்கிறோம். இந்தக் கழகத்தின் தலைவராக தூத்துக்குடி கத்தோலிக்க மதகுரு தோமஸ் மேற்றிராணியார் இருக்கிறார். இதன் செயலாளர் நான் தான். இதில் ஈழத்துக் கலைஞர்கள், தொல்பொருள் ஆராய்வாளர்கள் சிலரையும் சேர்க்கவிருக்கிறேன் தமிழர்களாகிய நாம் இத்தகைய ஆராய்ச்சி விஷயங்களில் கட்டாயமாக இணைந்து செயற்படவேண்டும்'' என அவர் கேட்டுக்கொண்டார்.

''ஈழநாடு'' பத்திரிகையைப் பற்றியும் அதன் அதிபர்களைப் பற்றியும் ஆசிரியரைப் பற்றியும் தாம் மிக உயர்வாக மதிப்பதாகவும் கூறிய அவர் ஈழநாட்டின் பணிக்குத் தமது வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டார்.

கொழும்பு மீரானியா வீதியில் உள்ள பிரபல வர்த்தகரும் முன்னாள் இலங்கை-இந்திய வர்த்தகர் சங்க உபதலைவரும், ஆராய்ச்சி நூல்களில் மிகவும் ஈடுபட்டுள்ளவருமான திரு. எம் ஏ கிஷோர் அவர்

பலர் பேசினர்.

......

20 கோடி ரூபா செலவில்

## எண்ணை சுத்திகரிப்பு நிலையம்

கொழும்பு, வியாழன்

அடுத்த மாதம் 12ம் திகதியன்று இலங்கை எண்ணெய்க் கூட்டுத் தாபனத்தைச் சேர்ந்த சபுகஸ்கந்தையிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை பிரதமர் திரு டட்லிசேனநாயக்கா திறந்து வைப்பார்.

20 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந் நிலையம் வருடமொன்றுக்கு 10 இலட்சத்து எழுபதினாயிரம் கலன் அழுக்கெண்ணெயைச் சுத்தமாக்கும். 1973ம் ஆண்டு அளவில் இந் நிலையம் அதன் முழுத் தொகையையும் உற்பத்தி செய்யும். எனவே, இவ் வடிசாலை நாட்டின் சுயதேவையை கணிசமான அளவில்பூர்த்திசெய்யும். பலவருடங்களாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்த ஏழுரக எண்ணெய்களை இத் தொழிற்சாலைஉற்பத்தி செய்யும்.

இத் தொழிற்சாலைக்கு கட்டிஎண்ணெய்விநியோகம் செய்யவும் அங்குதொழில் செய்பவர்களுக்கு பயிற்சியளிக்கவும் மிஞ்சிய எண்ணெய்களை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் இணங்கிரோயல் டச் ஷெல் கம்பெனியைச் சேர்ந்த கட்டி எண்ணெய் விநியோகக்கம்பெனி இலங்கை அரசாங்கத்துடன் ஓர் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளது. ஏற்கனவே இவ் வடிசாலைக்கு 600,00தொன் கட்டி எண்ணெய் வந்து சேர்ந்துள்ளது. உற்பத்தி வேலை ஆரம்பமாவதற்கு முன் பாக்கி எண்ணெய் வாராவாரம் வந்துகொண்டிருக்கின்றது. உற்பத்தி அலுவல் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது இவ்வடிசாலையில் கடமையாற்றக் கட்டி எண்ணெய் விநியோகக் கம்பெனியைச் சேர்ந்த 40 தொழில் நுடப அதிகாரிகள் இலங்கை வந்தடைந்தனர். இவர்கள் அடுத்துவரும் இரு வருடங்களுக்கு இங்கு தொழில் செய்வதுடன் இந் நாட்டினருக்கும் இத்தொழிலில் பயிற்சியளிப்பர்,

தற்சமயம் இறக்குமதியாகும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்ப் பொருள்களின்மீது அரசாங்கம் வருடமொன்றுக்கு 10 கோடி ரூபாய் செலவிடுகின்றது. இத் தொழிற்சாலையின் மூலம் முதல் ஐந்து வருடங்களில் இத்தொகையில் மூன்றில் ஒருபாகத்தைச் சேமிக்க முடியுமென அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத திருஞானசம்பந்த சுவாமிகள் புதிதாக வந்து கோவில் கொண்டிருக்கிறார். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளின் நல்லூர்க் கிளை ஆதீனம், சிவன்கோயிலுக்குப் பக்கத்திலே ''ரெடிமேடாக’ உள்ள மழவராயர் மடத்தில் ஏற்பட்டு, எல்லா மக்களையும் ''வருக வருக'' என்று ஈர்த்துவருகின்றது.

நமது மணிபாகவதர் துறவு பூண்டு ஸ்ரீமத்சுவாமிநாதத் தம்பிரானாகிய மூன்றாவது ஆண்டுவிழா நேற்றுமுன் தினம் அங்கு அன்னதானம், பஜனை, ஊர்வலம், பூசை முதலிய வைபவங்களுடன் நடைபெற்றது.

இரண்டு மாதங்களுக்கு முன்பாக அந்த இடத்துக்குச் சென்று பார்த்தேன். அங்கு நுழைவதற்கும் கால்கூசியது இப்போது புதுப் பொலிவுடன், நல்லூரின் அழகையும் பெருமையையும் உயர்த்தக்கூடிய வகையில், இந்த

க்கு உள்ளதுபோல பௌத்தர்களுக்கு வாழ்க்கையிலே ''கடவுள்'' என்ற ஒரு ''பிடி'' இல்லாமலுள்ளதே என்று காலஞ்சென்ற பெரிய பண்டாரநாயகா ஒரு சமயம் குறைப்பட்டார். ஆனால் கதிர்காமம், முனீஸ்வரம் முதலிய இடங்களிலே பௌத்த மக்கள் பக்தியுடன் சென்று வணங்குவதைக் காண்கையில், அவர்களுக்கு தெய்வநம்பிக்கை யில்லை என்று எப்படிக்கூறமுடியும்?

0 0 0

குற்றமிலா தார்குரைகடல்
சூழ்ந்த கோணமாமலை யமர்
ந்தாரைக், கற்றுணர்கேள்
விக் காழியர் பெருமான் கரு
த்துடை ஞானசம்பந்தன்,
கற்ற செந்தமிழார் மாலை
யீரைந்தும் உரைப்பவர்
கேட்பவர் உயர்ந்தோர்,
சுற்றமுமாகித் தொல்வினை
யடையார் தோன்றுவர்
வானிடைப் பொலிந்தே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்

## ''அற்பசலுகைகளுக்காக பதவிகளை துஷ்பிரயோகம் செய்கின்றனர்''

### எம். பி.க்கள் பற்றி தீவுப்பகுதி எம். பி.

நல்லூர், புதன்

''தமிழர் சுயாட்சிக்கழகத்தின் உரிமைகளை நாம் ஆட்சிமன்றத்தின் மூலம் அடையமுடியாது. ஆட்சிமன்றப் பதவிமோகம் கொண்டுள்ள சிலர் ஆட்சிமன்றம் சென்று, அற்பசலுகைகளுக்காக தங்கள் பதவிகளை துஷ்பிரயோகம் செய்துவிடுவார்கள் என்பதற்காகவே நம் இப் பதவிகளைப் பெற முயலுகிறோம். இதற்காகவே பல இடங்களில் எமது ஆதரவாளர்களை நியமிக்கவுள்ளோம்''.

இவ்வாறு மண்டைதீவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட முதலாவது தமிழர் சுயாட்சிக் கழகக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப்பேசுகையில் தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் கூறினார்.

## ‘‘நல்லனவற்றைத் தேர்ந்து படிக்க வேண்டும்’’

அளவெட்டி, புதன்

''இந்தியாவிலிருந்து சஞ்சிகைகள் வருகின்றன. அவற்றில் சில சிறந்தனவாயும் சில தரமற்றனவாயும் இருப்பதைக்காண்கிறோம் இவற்றை மக்கள் அக்கறையுடன் கவனித்து வாசித்து அறிவைப் பெருக்கவேண்டும்'' என யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ‘நாவேந்தன்’ பத்திரிகை வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய அறநெறிக்காவலர் முதலியார் திரு. செ. முத்துத்தம்பி கூறினார்.

இந்தியாவிலிருந்து வரும் சஞ்சிகைகளில், இப்போது சினிமாப் படங்களில் இடையிடையே ஆங்கிலவார்த்தை பேசப்படுவதுபோல கட்டுரைகளிலும் இடையிடையே ஆங்கில வசனங்கள் வருகின்றன. இது தற்போது எழுத்தாளர்களின் புது நாகரிகமாக விளங்குகின்றது, என இவ்விழாவில் தேசிய சொக்கன் கூறினார்.

மற்றும் திரு வி பொன்னம்பலம், புதுமைலோலன், வழக்கறிஞர் என் ரி சிவஞானம் ஆகியோரும் பேசினர்.

### உப உணவு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்ட இலக்கை அடைந்துவிட்டதாகவும் இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் தன்னிறைவு பெற முடியும் எனவும் விவசாய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org